★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 4 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

வரு. 92 இல. 55 | Monday 04, March, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் நியமனம்



பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் தேர்தலும் அதன் பின்னரான 06



## போரா சமூக ஆன்மீகத் தலைவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி புனித செய்யதினா முஃபத்தல் செய்புதீன் சாஹிப் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (3) பெஜெட் வீதியிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. போரா சமூகத்தின் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர் 06

### தரம் 08க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு

## தகவல் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவுக் கல்வி



**மார்ச் 19ஆம் திகதி முதல் ஆரம்பம்**

எதிர்காலத்தில் நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் திறன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களின் எதிர்கால இலக்குகளை அடைவதற்கு 06

### அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர்

## வீட்டிலுள்ள தங்கங்களை விற்றா அரசை வழி நடத்தப்போகிறார்கள்



**வரி செலுத்துவதை இல்லாமல் செய்வதாக கூறுபவர்களிடம் அமைச்சர் மனுஷ கேள்வி**

அதிகாரத்துக்கு வந்த பின்னர் வரி செலுத்துதல்களை இல்லாமல் செய்வோம் என்பவர்கள் தங்களது வீட்டிலுள்ள தங்கத்தை விற்றா அரசாங்கத்தை வழி நடத்தப்போகிறார்கள் என அமைச்சர் மனுஷ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார். அரசாங்க வருமானத்துக்கான உத்திகள் குறித்து வரி குறைப்புகளை 06

### நாட்டிலுள்ள 10,126 பாடசாலை மாணவர்களுக்கான

# ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் விண்ணப்பங்கள் கோரல் ஆரம்பம்

### எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

**நேரடியாக ஒப்படைக்காது பாடசாலை அதிபரிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும்**

**www.facebook.com/president.fund, www.presidentsfund.gov.lk ஊடாக விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்கள் மூன்று மொழிகளிலும் பெறலாம்**

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்தின்படி நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/2025"க்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.presidentsfund.gov.lk ஊடாக விண்ணப்பத்தையும், அதற்கான அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் மூன்று மொழிகளிலும் பெற முடியும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.03.2024 திகதிக்கு முன் மாணவர் கல்வி கற்கும் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும். 06

## ஆனந்தா–நாளந்தா கிரிக்கெட் சமர் ஜனாதிபதி ரணில் பார்வையிட்டார்



கொழும்பு SSC மைதானத்தில் நடைபெற்ற ஆனந்த மற்றும் நாளந்த கல்லூரிகளுக்கிடையிலான 94 ஆவது வருடாந்த மாபெரும் கிரிக்கெட் சமர் போட்டியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் (03) பார்வையிட்டார். மறைந்த கலாநிதி என். எம். பெரேரா ஞாபகார்த்த சவால் கிண்ணத்துக்கான மாபெரும் கிரிக்கெட் போட்டி இவ்வருடம் பிரமாண்டமாக நடைபெற்று வருவதுடன் அதன் இறுதி நாள் நேற்றாகும். மாணவர்களை உற்சாகப்படுத்த விளையாட்டுப் போட்டியை 06



03 கடும் வட்டியுடனான கடன்கள் **அரசின் ஒழுங்குபடுத்தல் நடைமுறை அவசியம்**



03 தரமற்ற ஊசிமருந்து கொள்வனவு **மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க நீதிமன்றில் இன்று இரகசிய வாக்குமூலம்**

03 **காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலுடன் கைதி கண்டுபிடிப்பு**

### புதுடில்லியில் கோலாகலமாக நிறைவுற்ற

## இராமாயணம் சித்திரகாவியம் நிகழ்வு சிறப்பு அதிதியாக அமைச்சர் ஜீவன்

இந்தியாவின் புதுடில்லியில் ஆரம்பமான இராமாயணம் சித்திரகாவிய கண்காட்சியில் சிறப்பு அதிதியாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பங்கேற்றதுடன் கண்காட்சியையும் திறந்து வைத்துள்ளார். இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் கலாசார 06



## சர்வதேச நாடுகளில் இலங்கை அரிசிக்கு கேள்வி அதிகரிப்பு

**அமைச்சர் மஹிந்த அமரவீர**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய அரபு ராஜ்ஜியம் உட்பட பல சர்வதேச நாடுகளில் இலங்கை அரிசிக்கான கேள்வி அதிகரித்து வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் 06

## UNFPA 50 வருட பூர்த்தி முத்திரை வெளியீடு

1994 இல் கெய்ரோவில் நடைபெற்ற மக்கள் தொகை மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச மாநாட்டின் (ICPD) 30 ஆவது ஆண்டு நிறைவையும், ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) இந் நாட்டில் செயற்பாடுகளை ஆரம்பித்த 50 ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கும் வகையில் கொழும்பில் விசேட ஞாபகார்த்த நிகழ்வு நடைபெற்றது. 06




### சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு

## ஐ.நா. குடிசன நிதியத்தினால் 2.5 மில். டொலர் நன்கொடை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் குடிசன நிதியத்தின் மூலம் இரண்டரை மில்லியன் அமெரிக்கன் டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. 06

### அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு

## பொய்யான தகவல் வழங்கிய 7,000 பேர் மீது நடவடிக்கை



பொய்யான தகவல்களை வழங்கி அஸ்வெசுமவில் இணைந்த 7,000 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அஸ்வெசும விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் 06

### தமிழக மீனவர் அத்துமீறலை எதிர்த்து

## யாழ். மீனவர்கள் கறுப்புக் கொடியுடன் இலங்கை கடல் எல்லையில் போராட்டம்

**யாழ். விசேட நிருபர்**

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் நேற்று கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர். 06





இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் நேற்று (03) சென்னையில் அதன் ஆசிரியர் எஸ். சந்திரசேகரன் தலைமையில் சர்வதேச மகளிர் தின விழா, தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் நடைபெற்றது. இந்நிகழ்வு பற்றிய ஆக்கத்தை வெளியிட்ட தினகரனின் பிரதியொன்றை, அதன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் நந்தவனம் அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளரிடம் கையளிப்பதையும், பிரதம அதிதி புரவலர் ஹாசிம் உமர் அருகில் நிற்பதனையும் காணலாம்.

### தமிழக மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து

## யாழ். இந்திய துணை தூதரகம் முன் நாளை முற்றுகைப் போராட்டம்

**வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் அழைப்பு**

**யாழ். விசேட நிருபர்**

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்தை முற்றுகையிடும் போராட்டத்துக்கு வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் அழைப்பு விடுத்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தவுள்ளதாகவும், அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் 06

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு 02 பெல்ஜியம் Air விமானங்கள்

**உடனடியாக சேவையில் இணைப்பு**



ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தில் தற்போது நிலவும் விமானங்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பெல்ஜியம் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் இரண்டு விமானங்கள் தற்காலிகமாக வாடகை அடிப்படையில் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. A 330200 எயார்பஸ் வகை விமானங்கள் இரண்டும் 06

## இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் 'மகே கதாவ' நூல் நாளை வெளியீடு

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் சுயசரிதை நூலான மகே கதாவ (எனது கதை) நூல் வெளியீட்டு விழா நாளை 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஆனந்தாக் கல்லூரி குலரத்ன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றும் இன்றும் தனது வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் 19 அத்தியாயங்களாக தமது இளமைப் பருவம், பாடசாலை கல்வி, பல்கலைக் 06

# நகர்வலம்



## கெக்கிராவ செயலக பிரிவில்...

# பாவனையின்றி அழிவடைந்து வரும் களஞ்சியசாலை கட்டட தொகுதி

### விரைவில் திறக்க நடவடிக்கை என்கிறார் துமிந்த திஸாநாயக்க எம்.பி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட புகையிரத நிலைய நகரப் பகுதியில் பாவனையின்றி அழிவடைந்து வரும் களஞ்சியசாலைக் கட்டட தொகுதியை கூடிய விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

குறித்த களஞ்சியசாலை கட்டடம் பாவனையின்றி அழிவடைந்து செல்வதாக பிரதேச விவசாயிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நெல், சோளம் உள்ளிட்ட பெருமளவிலான தானியங்களை களஞ்சியப்படுத்தக்கூடிய 04 களஞ்சியசாலை கட்டட தொகுதியை உள்ளடக்கிய இந்த களஞ்சியசாலை விவசாய அமைச்சின் கீழ் உள்ள நெல் சந்தைப்படுத்தல் மற்றும் உணவு மேம்பாட்டு வாரியம் என்பனவைகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.



இந்த நெற் களஞ்சியசாலையில் ஒரு காவலரண், அலுவலகம், காபட் இடப்பட்ட உள்ளக வீதி என்பனவைகளுடன் களஞ்சியசாலையைச் சூழ யானை வேலி உள்ளிட்ட சகல வசதிகளும் இருப்பதுடன் இதனை பாவனைக்கு எடுக்காமல் தற்போது காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நெல்லை களஞ்சியப்படுத்தக்கூடிய இந்த கட்டடத்தை கூடிய விரைவில் திறந்து தருமாறு விவசாயிகள் பாராளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இனிய நந்தவனம் சஞ்சிகை ஏற்பாட்டில் கௌரவிப்பு



இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை (03) சென்னையிலுள்ள விஜய் பார்க் ஹோட்டலில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் உலக நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 25 மகளிர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் இலங்கையை சேர்ந்த ஐந்து ஆற்றல் மிகு பெண்கள் இலங்கையில் இருந்து பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். திருமதி. பவானி சச்சிதானந்தன், எஸ். சௌமியா, திருமதி. பிரீத்தா கோணேஸ்வரன், கவிமகள் ரேவதி, டயானா எஸ். ஐ. மனோஜ் ஆகியோரே விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அருகில் திருமதி. ஹாஷிம் உமர், செயலாளர் சாதிக் பாட்சா, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் நாட்டு தொழிலதிபர் அப்துல் வஸீத் ஆகியோரும் காணப்படுகின்றனர். இந்நிகழ்விற்கு இலங்கையின் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் ஊடக அனுசரணை வழங்கியிருந்தன.

# பேருவளையில் 'LPL' கிரிக்கட் போட்டி




பேருவளை, சீனன்கோட்டை 'Legent College' ஒழுங்கு செய்த 10 அணிகள் கலந்துகொண்ட 'LPL' கிரிக்கட் சுற்றுப்போட்டி நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் (01) நடைபெற்றது. இறுதிப்போட்டியில் 'Legent Rangers' கிரிக்கட் அணி வெற்றிபெற்றது. பரிசளிப்பு நிகழ்வுகள் Legent கல்லூரி அதிபர் அஸ்ரி தலைமையில் (03) வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பொறியியலாளர் ஹஸீப் மரிக்கார் சம்பியன் கிண்ணத்தை 'Legent Rangers' அணிக்கு வழங்குவதையும் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை அதே அணியைச் சேர்ந்த அஸீப் சர்பான் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், விழாவின் கௌரவ அதிதி இளைஞர் பாராளுமன்ற முன்னாள் அமைச்சர் அஹமட் சாதிக்கையும் படத்தில் காணலாம்.

# வெலிகம அறபாவில் இன்று இல்ல விளையாட்டு போட்டி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை கல்லூரி பதியுத்தீன் மஹ்மூத் விளையாட்டுத் திடலில் இடம் பெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் எம். டி.எம். முதஹ்ஹர் தலைமையில் இடம் பெறும் இவ் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் பரிசளிப்பு வைபவம் 6ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக மாத்தறை வலய கல்விப் பணிப்பாளர் திரு ஓ.டி. முதலிகே கலந்து கொள்வதோடு விசேட அதிதிகளாக தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.ஏ.எம். மஷாஹிர், முலட்டியன வலய கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.டி.எம். ஆகில், மாத்தறை வலய விளையாட்டுத் துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எச்.எம். ஷந்திரகுமார மற்றும் வெலிகம கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி நாலிக தயமந்திடி ஸில்வா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# மோ. சைக்கிள் லொறியுடன் மோதி விபத்து; ஒருவர் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியொன்றின் பின்புறத்தில் மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயங்களுக்குள்ளாகி மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற மேலும் ஒருவர் சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் புத்தளம் திருகோணமலை பிரதான வீதியின் 95ஆவது மைல்கல் பகுதிக்கு அருகாமையில் 02ஆம் திகதி இரவு இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.65 வயதுடைய சியம்பலாகஸ்வெவ, சீப்புக்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

# மூதூர் பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளராக தஷ்ரீக் நியமனம்



**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச செயலக பிரிவில் மூதூர் நகர் பிரதேசத்திற்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக எஸ்.எச்.தஷ்ரீக் (சஹ்தி) பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளர்.

இப்பிரதேச மக்களுக்கான முஸ்லிம் விவாகப் பதிவு விவகாரங்களை மேற்கொள்ளும் முகமாக திருமலை மாவட்ட செயலகத்தில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த கெட்டியாராச்சியினால் இந்நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மூதூர் நகர் பிரதேசத்திற்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.எச். தஷ்ரீக் (சஹ்தி) அவர்கள் இப்பிரதேச மக்கள் மத்தியில் மிகுந்த அபிமானம் பெற்றவராவார்.

# கிழக்கின் குரல்



# பலஸ்தீனம் மீதான ஜனாதிபதியின் மனிதாபிமானத்தை இனவாதிகள் சிலரால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது!

### ஐ.தே.கவின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை கண்டனம்!

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**

'இஸ்ரேல் பலஸ்தீன் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனிய குழந்தைகளுக்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ள நிதியம் தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவுத் தலைவி ஹிருணிகா பிரேமசந்திர மனிதாபிமானமற்ற கருத்துக்களைக் கூறி விமர்சித்துள்ளார்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதியம் தொடர்பில் ஊடகங்களிடம் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்திருந்த கருத்தைக் கண்டித்து ஐ.தே.க பிரதம அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் அணியில் இருக்கும் ஹிருணிகா இவ்வாறு கூறிய கருத்தில் இனவாதம் உள்ளது. இஸ்ரேல் பலஸ்தீன் யுத்தத்தினால் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு உதவுவதற்காக தனியாரிடமிருந்து பணம் சேகரித்து வழங்கும் பொருட்டு நிதியமொன்றை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். இந்த நிதியத்துக்கு அரசாங்கமும் 01 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளது. இந்நிதியத்துக்கு பல்வேறு தனியார் தரப்புக்களிடமிருந்தும் நிதியுதவிகள் கிடைத்து வருகின்றன. இவ்வாறான ஜனாதிபதியின் மனிதாபிமான திட்டத்தை இனவாதிகளால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது" என்று லொயிட்ஸ் ஆதம்லெப்பை குறிப்பிட்டுள்ளார்.

"நாடு அதல பாதாளத்தினுள் சென்றிருந்த காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எம்.பி பின்வாங்கினார். அவரது அணியில் இருக்கும் ஹிருணிகாதான் இவ்வாறு பேசியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் மக்களை தவறாக திசைதிருப்பப் பார்க்கின்றனர். பேஸ்புக் அரசியல் செய்யும் ஜே.வி.பியினரிடமிருந்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். இனவாத அரசியல் நடத்துவோரை இஸ்லாமிய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் இனவாத முகம் காண்பிக்கப்பட்டது. இப்போது ஹிருணிகா இவ்வாறு பேசுகின்றார். கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஜனாஸா எரிப்புக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியவர், டொக்டர் ஷாபி மீது கருக்கலைப்பு பழி சுமத்துவதில் பிரதானியாக செயற்பட்டவர் போன்றோர் எதிரணியில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.



ஆனால் இது தெரிந்தும் கூட இதுவரை ஒரு எதிர்ப்பு அறிக்கை வெளியிடாமல் முஸ்லிம் தலைவர்களாக இருவர் உலாவருகின்றனர். வெறுமனே பலஸ்தீன சால்வை அணிந்து ஊடகங்களுக்கு படம் காட்டுவதால் பயனில்லை. இத்தகையோர் விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்" என்றும் லொயிட்ஸ் ஆதம்லெப்பை தெரிவித்துள்ளார்.

# நாவலடியில் மோட்டார் சைக்கிள் விபத்து; பெண் பரிதாப மரணம்!

**(கல்குடா தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு_ கொழும்பு பிரதான வீதியில் நாவலடி பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது கணவர் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி ஸஹ்றா பெண்கள் அரபுக்கல்லூரியில் கல்வி கற்கும் தனது மகளைப் பார்வையிட்டு விட்டு வெலிக்கந்த, குடாபொகுனயிலுள்ள தமது வீட்டுக்கு அவர் திரும்பிக் கொண்டிருக்கையில் கொழும்பு பிரதான வீதியில் நாவலடியில் வைத்து மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்தமையினால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அகீல் எமேர்ஜென்ஸி ஹெல்பிங் யுனிட் வாகனம் விபத்தில் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த பின்னர் அப்பெண் மரணமடைந்துள்ளார்.

இவ்விபத்தில் இல 01, குடாபொகுன, வெலிக்கந்த எனும் முகவரியைச் சேந்த 53 வயதுடைய அப்துல் ஹமீத் ஜமீலா என்பவர் மரணமடைந்துள்ளதுடன் அவரது கணவரான 56 வயதுடைய அபூபக்கர் முஹம்மது இப்றாஹீம் என்பவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கிண்ணியா பகுதியில் தீயில் எரிந்து வீடொன்று நாசம்!

**(கிண்ணியா மத்திய நிருபர்)**

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வான்எல பொலிஸ் பிரிவில் உள்ள ஆயிலியடி பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்று நேற்றுமுன்திம் (2) இரவு 11.00 மணியளவில் தீப்பிடித்து எரிந்து முழுமையாக நாசமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

தாய், தந்தை மற்றும் ஒரு பிள்ளை ஆகிய மூவரும் வசித்து வந்த அலி முஹான் என்பவருடைய வீடே இவ்வாறு தீக்கிரையாகி உள்ளது. சம்பவம் இடம்பெற்ற சமயத்தில், இவர்கள் உறவினர் வீடு ஒன்றுக்கு சென்றிருந்ததாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து தீயணைக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு, தீயை அணைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பிடித்தமைக்கு மின்னொழுக்கே காரணமாக இருக்கலாம் எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தபால் அலுவலர் முகம்மது நகீப் அரச சேவையில் இருந்து ஓய்வு

**(கந்தளாய் தினகரன் நிருபர்)**

கிண்ணியாவைச் சேர்ந்த முகம்மது நகீப் என்பவர் 37 வருடங்களாக தபால் உத்தியோகத்தராக திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல தபால் அலுவலகங்களில் கடமையாற்றி இறுதியாக கிண்ணியா தபால் அலுவலகத்தில் இருந்து தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

சுமார் 37 வருடங்கள் காலநேரம் பாராது அர்ப்பணிப்புடனான நேர்மையான தபால் ஊழியராக சிறப்பான சேவையினை மனநிறைவுடன் செய்து தனது அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கிறார்.

சக ஊழியர்களுடன் மாத்திரமன்றி பொதுமக்களுடனும் அவர் இனிய நல்லுறவைப் பேணி வந்துள்ளார். அவர் மனித நேயமுள்ளவர், பிறருக்கு உதவிகளை செய்யக் கூடியவர்



ஓய்வு பெற்று செல்லும் அவருக்காக கிண்ணியா தபாலகத்திலும் குறிஞ்சாக் கேணி தபாலகத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரியாவிடை நிகழ்வுக்கு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சி.அருள்செல்வம் மற்றும் சி.சி. குமணண், பி.எம்.ரகுபதி, சி.எம். பி.தவரூபன், பி.எம்.றிஸ்வான், பி.எம்.சிபனா, பி.எம்.ரீசா, சக ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

மர்ஹூம்களான ஓய்வுபெற்ற தபால் ஊழியர் அகியார் மற்றும் நெகுமத்தும்மா தம்பதியரின் மகன் முகம்மது நகீப் ஆவார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம்

## தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு



விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தரப்பினரையும் இணைத்து தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வருடாந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தனித்தனியாகச் செயற்படுவதால், எதிர்பார்த்த முடிவுகள் தாமதமடைவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்காக அரச மற்றும் தனியார் விவசாய ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய கீழ் மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய வகையில் இந்த தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இதனுடன் தொடர்புள்ள 26 திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அரச மற்றும் தனியார் துறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர விவசாய தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கிய கூட்டு வேலைத்திட்டத்தின் மூலம் இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் எனவும் விவசாய ஏற்றுமதி பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

06

## தவக்கால சிந்தனை



### கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் பணி

இறைவாக்கினருக்கான எளிய வரைவிலக்கணம் கடவுளின் உண்மையினை அடுத்தவர்களுக்கு உரைப்பவர்கள் என்பதே. இறைவார்த்தையின் மரபு ரீதியான சிந்தனையின்படி நாம் இறைவாக்கினராக இல்லாவிட்டாலும் நாம் இறைவனின் உண்மையினை எமது இல்லங்களிலும் நண்பர்கள் மத்தியிலும் பணியாற்றும் பணி மையங்களிலும் எடுத்துரைக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

"இறைவாக்கினர்கள் தமது சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை" என்கிற வரிகள் நமக்கு மிகவும் பரிச்சயமான இடங்களில் உண்மையினை எடுத்துரைப்பது கடினமான பணியாகும் என்பதனை எடுத்துரைக்கின்றது. இயேசு பல்வேறுபட்ட எதிர்ப்புக்கள், கடும்போக்குகள் மத்தியில் தனது சொந்த ஊர் மக்களுக்கு உண்மையினை எடுத்துரைத்தார். அதற்கு எதிராக அவர்கள் கடும்போக்கினையும் வெளிக்காட்டினார்கள். அவர்களது வெளிப்படையான கோபம், அலட்சியம் இவற்றின் மத்தியில் இயேசு எல்லா இறைவாக்கினரைப் போன்று அவரது பணியினை சாதகமான மற்றும் சாதகமற்ற சூழ்நிலையிலும் துணிந்து ஆற்றினார். இன்றைய உலகில் இறைவாக்கினராக பணியேற்பது இலகுவானதல்ல. ஆயினும்,இயேசுவின் அனுபவத்தினைப் போன்று நாமும் வெறுக்கப்படும், ஏளனப்படும், துன்பத்திற்குள்ளாக்கப்படும் சூழ்நிலையிலும் கடவுளின் வார்த்தையினை அறிவிப்பதே நமது பணியாகும். சீரான, அமைதியான உலகில் உண்மையினை நமது அன்புக்குரியவர்களுக்கு எடுத்துரைப்பது நன்கு ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் வாழ்வளிப்பதாகவும் இருக்கும், ஆயினும் பலவேளைகளில் அவ்வாறு அமைந்து விடுவதில்லை. நாம் வாழ்கின்ற சீரற்ற இவ்வுலகில் நாம் கடவுளின் உண்மையினை அன்பு, கனிவு, கருணை, புரிதலுடன் எடுத்துரைக்க வேண்டும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

658 லட்சம் ரூபா செலவில் வன விலங்குகளுக்கான

## ரயில் சுரங்கப்பாதை காசிகோட்டேயில் நிர்மாணம்
## சுற்றுச்சூழல் அமைப்புகளின் பங்களிப்புக்கு

*அமைச்சர் பந்துல குணவர்தன பாராட்டு*



காட்டு யானைகள் மீது ரயில் மோதுவதால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக நாட்டில் முதல் முறையாக ரயில் பாதைக்கு அடியில் வனவிலங்கு சுரங்கப்பாதை அமைக்கப்படும். இதன்பணி கல்கமுவ கெடிவுல – காசிகோட்டேயில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கு அமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கை ரயில்வே திணைக்களம், சுரகிமு லங்கா தேசிய இயக்கம் உள்ளிட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் பலமுறை கலந்துரையாடியதையடுத்து, யானைகள் விபத்தில் சிக்குவதைத் தடுப்பதற்காக இந்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர்,

காட்டு யானைகள் ரயிலில் மோதும் விபத்தை தடுப்பது தொடர்பாக, துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற வகையில், ரயில்வே பொது முகாமையாளர் உள்ளிட்ட அனைத்து தரப்பு அதிகாரிகளுடன் சுமார் 6 மாதங்களாக பல சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

06

## அரச சேவையிலுள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காண பொறிமுறை தயாரிப்பு

### புதிய சுற்றறிக்கை வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க சேவையில் நிலவும் சர்ச்சைகளுக்கு தீர்வு காணும் வகையில் பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபையின் பிரதம செயலாளர்கள், திணைக்கள பிரதானிகள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அது தொடர்பான சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயர் மட்டத்தில் அரச சேவையை கட்டியெழுப்புவது மற்றும் பணி ஒத்துழைப்பின் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் இந்த பொறிமுறையானது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அரச சேவையில் சர்ச்சைகளைத் தடுப்பதற்கு முன்மொழியப்பட்ட பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு இணங்க இந்த சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உத்தேச புதிய பொறிமுறையானது முழு அரச சேவையிலும் அமுல்படுத்தப்படவுள்ளதுடன் பணியிடங்கள் மற்றும் தேசிய மட்டம் ஆகிய நிலைகளில் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

06

தரமற்ற ஊசிமருந்து கொள்வனவு

## மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க நீதிமன்றில் இன்று இரகசிய வாக்குமூலம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தரமற்ற Immunoglobulins ஊசி மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க அந்த சம்பவம் தொடர்பில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இரகசிய வாக்குமூலமொன்றை வழங்கவுள்ளார்.

Immunoglobulins மருந்து கொள்வனவு சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்க மாளிகாகந்த மஜிஸ்திரேட் நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் 02ஆம் திகதி அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

அதற்கிணங்க குற்றவியல் சட்டக் கோவையின் 127 ஆவது சரத்துக்கு இணங்க நன்றாக சிந்தித்து, சுயாதீனமாக, எந்த வெளி அழுத்தங்களும் இன்றி இந்த இரகசிய வாக்குமூலத்தை வழங்குவதற்கு விருப்பமா என அதன் போது மாளிகாகந்த மஜிஸ்திரேட் நீதவான் சந்தேக நபரிடம் வினவினார்.

அதற்கு தமது தரப்பான சந்தேக நபர் விருப்பம் தெரிவிப்பதாக சந்தேக நபர் சமன் ரத்நாயக்க சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி காஞ்சன ரத்வத்தே குறிப்பிட்டிருந்தார்.

06

கடும் வட்டியுடனான கடன்கள்

## அரசின் ஒழுங்குபடுத்தல் நடைமுறை அவசியம்

### புதிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் சுகீஸ்வர பண்டார

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரதேச மட்டத்தில் முறையற்ற விதத்தில் நடைமுறையிலுள்ள கடன்வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளினால் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கை அவர்களது சொத்துக்களும் எச்சரிக்கை மிகுந்ததாகியுள்ளதாக புதிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, வறுமை நிலையிலுள்ள பெருமளவு மக்கள் கடும் மனரீதியான உளைச்சல்களுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அளுத்கம பகுதியில் ஜப்பானிய மொழிப் பயிற்சிப் பாடசாலையொன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனங்களை முறைப்படுத்துவது அவசியமென்றும் அது சம்பந்தமான அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அதற்கான பொருத்தமான வேலைத்திட்டத்தை வழங்குவதற்கு தலைமைத்துவத்தை வழங்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அதுதொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சட்ட நியதிகளை தயாரிப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அதற்கான சந்தர்ப்பத்தைக் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலுடன் கைதி கண்டுபிடிப்பு

காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த நோயாளி தற்போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என்றும் மூளைக் காய்ச்சல் நோயாளிகள் வேறு யாரும் சிறைச்சாலையில் அடையாளம் காணப்படவில்லை என்றும் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகிய நிலையில், இரண்டு நோயாளிகள் உயிரிழந்தனர்.

எவ்வாறாயினும், இந்த நோயைக் கட்டுப்படுத்த சிறைச்சாலை சுகாதார பிரிவால் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.


## INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**
**VALIKAMAM EAST PRADESHIYA SABHA**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **loan** from the **World bank** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work(s) stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP) on** behalf of the **Valikamam East Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) stated in the Table below.

| No | Contract No | Contract Name | Estimated Cost (Rs. Mn) Without VAT | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VEPS/2024/BT-4/03 | Reconstruction of Urelu 1st Cross Street at Urumbirai. | 11.644 | C6 or above HIGHWAY | 90 | 77 Days | 117,000.00 | 9-July-2024 |
| 02 | LDSP/NP/JAF/VEPS/2024/BT-4/02 | RECONSTRUCTION OF JOHNRASA ROAD AT ATCHCHUVELY | 16.327 | C6 or above HIGHWAY | 90 | 77 Days | 164,000.00 | 9-July-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur, (T.P No: 021 205 8867, 021 205 8981)** and inspect the bidding documents at **Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur,** from 04-**Mar-2024** until 25-**Mar-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur** from **04-mar-2024** until 25-**Mar-2024** between **09:00 Hrs.** to **15:00 Hrs.** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,500.00**. The method of payment will be **by cash.**
8. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Local Development Support Project (LDSP), Valikamam East Pradeshiya Sabha , Point Pedro Road , Puttur, Jaffna** on or before **10.30** Hrs on **26-Mar-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. The Bid shall be valid up to 77 days after the deadline for Bid submission. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.
10. The Pre-Bid meeting will be held at Valikamam East Pradeshiya Sabha -Head Office, Point Pedro Road – Puttur on 11th march 2024 at 14.00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Valikamam East Pradeshiya Sabha , Puttur.**

**04.03.2024**

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 21ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

*சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.*

# உணவுப் பண்டங்களின் விலைகள் நியாயமற்ற முறையில் அதிகரிப்பு

இலங்கையில் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் உணவுப் பண்டங்கள் மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளை அதிகரிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் என்பவற்றின் விலை ரூபா 50.00 இனாலும் தேநீரின் விலை ரூபா 5.00 இனாலும் பால் தேநீரின் விலை ரூபா 10.00 இனாலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு சிற்றுண்டிகள் ரூபா 10.00 இனாலும் சோற்று பொதி ரூபா 25.00 இனாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுப் பண்டங்களின் திடீர் விலை அதிகரிப்பு குறித்து நுகர்வோர் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் இந்த விலை அதிகரிப்புக்கு ஆட்சேபனையை வெளிப்படுத்தியுள்ள பாவனையாளர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளதோடு, இந்த விலை அதிகரிப்பை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ள உணவுப் பண்டங்களதும் சிற்றுண்டிகளதும் தயாரிப்புக்கு கோதுமை மா, பால்மா, தேயிலை, சமையல் எரிவாயு, எரிபொருட்கள் என்பனதான் பயன்படுத்தப்படுகின்றன. அவை எதற்கும் கடந்த சில தினங்களுக்குள் விலை அதிகரிப்பு செய்யப்படவில்லை.

மாதாமாதம் விலைத் திருத்தம் செய்யப்படும் சமையல் எரிவாயு, எரிபொருட்களின் விலைகளும் கூட இம்மாதம் திருத்தம் செய்யப்படவில்லை. பாவனையாளர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இம்மாதம் எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

நிலைமை இவ்வாறு இருந்தும் கூட உணவுப் பண்டங்களதும் சிற்றுண்டிகளதும் விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தினர் இந்த உணவுப் பண்டங்களின் விலைகளை எந்த அடிப்படையில் அதிகரித்தார்கள் என்ற கேள்வியும் பரவலாக எழுந்துள்ளது.

அதன் காரணத்தினால் இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தினரின் இந்நடவடிக்கை குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். உணவுப் பண்டங்கள் உள்ளிட்ட எந்தவொரு பொருளுக்கும் கண்டபடி விலை அதிகரிப்பை மேற்கொள்ள இடமளிக்கக் கூடாது. எந்தவொரு பொருளுக்கும் விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான காரணங்கள் இருக்க வேண்டும். அவ்வாறான காரணங்கள் இல்லாத சூழலில்தான் தற்போதைய விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது. அந்த நெருக்கடி காலத்தில் மக்கள் முகம்கொடுத்த அசௌகரியங்களும் தாக்கங்களும் முழுமையாக நீங்கியதாக இல்லை. அதன் தாக்கங்களும் காணப்படவே செய்கிறது. பொருளாதார நெருக்கடி நிலவிய போது மக்கள் பல்வேறு விதமான நெருக்கடிக்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தார்கள். சமையல் எரிவாயு, எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்துக்கிடக்கும் நிலைக்கு உள்ளானார்கள். அப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவென முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார வேலைத்திட்டங்களின் ஊடாக பாரிய பிரதிபலன்களை மக்கள் அடைந்து கொண்டுள்ளனர். அதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாட்டு மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஆனாலும் அதன் தாக்கங்கள் காணப்படவெ செய்கின்றன. இந்த நிலையில் அவற்றில் இருந்தும் நாட்டை முழுமையாக மீட்டெடுக்கவென பொருளாதார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படடுள்ளன.

அந்த வகையில் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைகளும் இம்மாதம் திருத்தம் செய்யப்படவில்லை. அந்தளவுக்கு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட எந்தவொரு பொருளினதும் விலையைக் கண்டபடி அதிகரிக்க இடமளிக்கக் கூடாது என சம்பந்தப்பட்ட தரப்பினரைப் பாவனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். இல்லாவிடில் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தினர் போன்று ஆளுக்கொரு சங்கத்தை அமைத்து பொருட்களின் நிலையை நிர்ணயம் செய்யும் நிலைமை உருவாகிவிடும். அதன் விளைவாக மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர்.

ஆகவே இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். அதுவே பாவனையாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# முந்நூறு வருடங்களுக்குப் பிறகு இம்முறை அபூர்வ மகாசிவராத்திரி

2024 மகாசிவராத்திரியன்று சர்வார்த்தி ஸித்தி யோகம், சிவ யோகம், ஷிரவண நட்சத்திரம், சுக்கிரப் பிரதோஷம், மகாசிவராத்திரி என்ற ஐந்து சிறப்புயோக வேளையும் கூடி வருகின்றன.

விரதங்களிலேயே சிறந்தது மகாசிவராத்திரி விரதம். வரத பண்டிதம் போன்ற நூல்கள் இதன் மகிமையை விபரிக்கின்றன. மகாசிவராத்திரியன்று ஈசனைத் தரிசித்தவர், விரதம் இருந்தவர், பூஜை செய்தவர், சங்கல்பம் செய்தவர் எல்லோருக்கும் நற்கதி கிடைக்கும் என்கின்றன புராணங்கள்.



இந்த ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி வரவுள்ளது. அன்றிரவு 6 மணிக்குத் தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை 4 கால பூஜைகள் நடைபெறவுள்ளன. கூடவே ஐந்து யோகங்கள் ஒன்றுகூடும் சிறப்பு நிகழ்வும் ஜோதிட ரீதியாக நடைபெற உள்ளது. இது 300 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் ஜோதிட அதிசயம் ஆகும்.

ஜோதிட சாஸ்திரங்களின்படி, இந்த ஆண்டு மகாசிவராத்திரி அன்று சர்வார்த்த ஸித்தி யோகம், சிவ யோகம், ஷிரவண நட்சத்திரம், சுக்கிரப் பிரதோஷம், மகாசிவராத்திரி என்ற ஐந்து சிறப்பு யோக வேளையும் கூடி வருகின்றன. இந்த மகாசிவராத்திரியில் விரதமிருந்து கண்விழித்து சிவதியானம் செய்தால் எல்லா காரியங்களிலும் வெற்றி உண்டாகும். வேலைவாய்ப்பு, தொழில் முன்னேற்றம், வியாபார விருத்தி, அதிர்ஷ்டம் மற்றும் செல்வச்செழிப்பு உண்டாகும். மகாசிவராத்திரி சுக்கிர வார பிரதோஷத்தில் வருவதால் பொருளாதாரச் சிக்கல்கள் தீர்ந்து செல்வவளம் சேரும்.

சர்வார்த்த ஸித்தி யோகம் என்றால் உங்களுடைய எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கும் யோகம். இந்த யோகநாளில் ஈசனை வழிபட காரியத் தடைகள் அகன்று எண்ணியவை எளிதாக நிறைவேறும். சிவயோகம் என்றால் தியானிக்கும் வேளை. இந்நாளில் செய்யப்படும் யோகா, தியானம், பிராணாயாமம், மந்திர ஜபம் ஆகியவைகளால் பன்மடங்கு பலன் கிடைக்கும். 2024 மகாசிவராத்திரி நாளன்று முழுவதுமாக சிவயோகம் எனும் அற்புத வேளை கூடி வருகின்றது.

ஷிரவண நட்சத்திரம் சனி பகவானுக்கு உரியது. இந்த நட்சத்திரத்தில் எந்த நல்ல காரியம் செய்தாலும் அது மங்களகரமாக முடியும். இந்த மகாசிவராத்திரி நாளில் சனி பகவானையும், அவரை வழிநடத்தும் ஈசனையும் வழிபட வேண்டும்.

ஐந்து யோகங்களும் ஒன்றுகூடும் இந்த அபூர்வ மகாசிவராத்திரி நாளில் சிவவழிபாடு செய்யத் தவறக் கூடாது. சிவயோக வேளையில் நீங்கள் செய்யும் வழிபாடு ஈசனின் பரிபூரண அருளை பெற்றுத் தரும், உங்கள் வீட்டை பாதுகாப்பாக வைத்திருக்கும். உங்கள் வாரிசுகள் நலமோடு வாழ்வார்கள். சித்த யோகம் கூடி வருவதால் விநாயகப் பெருமானையும் இந்நாளில் வணங்கிட வேண்டும். இதனால் தொடங்கப்படும் சுப காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

மகாசிவராத்திரி இந்த ஆண்டு வெள்ளிக்கிழமை வருவதால் சுக்கிர பிரதோஷம் என்கிறோம். இந்த நாளில் ஈசனுக்கு விரதம் இருந்து வழிபட்டால் நீங்காத துன்பம், தீராத வியாதிகள், குறையாத கடன்கள், அனைத்தும் தீர்ந்து விடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கி வாழ்வில் இனிமையும், மகிழ்ச்சியும் நீடிக்கும் என்கின்றன ஜோதிட நூல்கள்.

மகாசிவராத்திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதிக்கும்போது காலையில் செய்ய வேண்டிய பூஜைகள் போன்றவற்றை செய்த பின், சிவன் கோயிலுக்குச் சென்று முறைப்படி தரிசிக்க வேண்டும். அதன் பின்னர் நடுப்பகலில் நீராடி, உச்சிகால வழிபாடுகளை முடித்துவிட்டு சிவபூஜைக்கு உரிய பொருட்களைச் சேகரித்து வைக்க வேண்டும். மாலை நேர வழிபாட்டை முடித்துவிட்டு, ஏற்கெனவே தூய்மை செய்து அலங்கரிக்கப்பட்ட இடத்தில் சிவலிங்கத்தை வைத்து ஜாமத்துக்கு ஒன்றாக நான்கு ஜாமங்களிலும் பூஜை செய்து வழிபட வேண்டும்.

அன்று இரவு முழுவதும் கண் விழித்து வழிபாடு செய்ய முடியாவிட்டாலும், 'லிங்கோற்பவ' காலமாகிய இரவு 11:30 மணி முதல் 12.30 மணி வரை உள்ள காலத்திலாவது சிவதரிசனம் செய்து வழிபட வேண்டும்.

**கோபி சிவம்**
*அம்பிகை அடியார், ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், 2A ELOWOOD ROAD, CROYDON, CRo 2SG, 08492454500*

## ஐ. நா சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வு;

# சதுப்புநிலங்களை மறுசீரமைக்கும் உலகளாவிய முன்னணி நாடாக இலங்கைக்கு அங்கீகாரம்

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வில் (UNEA6) சதுப்புநிலங்களை மறுசீரமைப்பதில் இலங்கை உலகளாவிய முன்னணி நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐ. நா சுற்றுச்சூழல் பேரவையின் ஆறாவது அமர்வு கடந்த வாரம் கென்யாவின் நைரோபியிலுள்ள ஐ. நா சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்கு முன்னர், கூட்டத்தில் ஆராய்வதற்கான அடித்தளத்தை அமைப்பதற்காக நிரந்தரப் பிரதிநிதிகளின் குழு கூடியது. இந்த மாநாட்டின் சிறப்பம்சங்களில், சதுப்புநில மறுசீரமைப்பு முயற்சிகளில் இலங்கையை உலகளாவிய முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மதிப்புமிக்க விருதைப் பெற்றுள்ள இலங்கையின் சதுப்புநில சுற்றுச்சூழல் கட்டமைப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் புத்துயிர் அளிப்பதில் இலங்கை காண்பிக்கும் அர்ப்பணிப்பு உலகில் செயல்திறன் மிக்க சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுக்கு ஒரு சான்றாகக் காணப்படுகிறது.

ஐ.நா சுற்றுச்சூழல் பேரவையின் ஆறாவது அமர்வின் நிகழ்ச்சி நிரல், காலநிலைமாற்றம் , பல்லுயிர் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு ஆகிய மூன்று நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் பலதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்திற்கு மையமாக உள்ளது.

அறிவியல் ஆராய்ச்சி, அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் வலுவான அடித்தளத்துடன் விரிவான சுற்றுச்சூழல் கொள்கைகளை வகுக்க அரசு நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், அறிவியல் சமூகங்கள் மற்றும் தனியார் துறைகளுக்கு இந்த மாநாடு ஒரு முக்கிய மன்றமாகச் செயல்படுகிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரே உலகளாவிய உறுப்பினர் மன்றமாக, ஐ. நா சுற்றுச்சூழல் பேரவையானது, கூட்டு சுற்றுச்சூழல் பொறுப்பை நோக்கமாகக் கொண்ட முக்கியமான முன்முயற்சிகள் மற்றும் புதுமையான உத்திகளுக்கு ஒரு தனித்துவமான தளத்தை வழங்குகிறது.





இந்த அமர்வின் ஊடாக, அடுத்த தலைமுறைக்கு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதன் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன கலந்து கொண்டார். சதுப்புநிலத்தில் இலங்கை உலகளவில் முன்னிலை வகிக்கும் விருதை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க பெற்றுக்கொண்டார்.

# வலிப்புநோய் சிகிச்சை நிலையத்தை மதிப்பீடு செய்ய சவுதி அபிவிருத்தி (SFD) நிதிய பிரதிநிதிகள் வருகை

சவுதி அரேபிய நிதியத்தின் நிதியுதவியுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்தில் கை கால் வலிப்பு நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு 8 மாடிக்கட்டடமொன்று 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைப் பார்வையிட சவுதி அரேபிய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தது. இந்தக் குழுவினர் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியை கடந்த 27 ஆம் திகதி சந்தித்தனர்.

இச்சிகிச்சை நிலையத்தின் கட்டடத்துக்கான மொத்த தொகையான 75 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 32 மில்லியன் டொலர் சவுதி நிதியத்தின் மூலம் பெறப்பட்டதாகும். இலங்கை சுகாதாரத் துறையின் கால் கை வலிப்பு தொடர்பான சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் சவுதி நிதியத்தின் பிரதிநிதிகளின் விஜயம் அமைந்துள்ளது.

242 படுக்கை அறைகளைக் கொண்ட இக் கட்டடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்துவைக்கப்பட்டிருந்தது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அமைந்திருக்கும் இந்த சிகிச்சை நிலையத்தினூடாக மக்கள் பெரிதும் நன்மையடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



அதுமட்டுமன்றி இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கையிலிருந்து 1000 தாதியர்களை இணைத்துக் கொள்வதற்கு சவுதி அரேபியா தீர்மானித்துள்ளது. இதற்காக தெரிவும் அண்மையில் நடைபெற்றது. இதில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் தாதியர்கள் கலந்து கொண்டனர். தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் அமைச்சு அதிகாரிகள் தீவான் முகவர் நிலையம் பிரைவேட் லிமிடெட் ஏற்பாடு செய்த நேர்காணல்களை நேரில் கண்காணித்தார்.





முதல் சுற்றில் தாதியர் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. நேர்முகத் தேர்வில் அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஏராளமான தாதியர்கள் கலந்து கொண்டனர்.

தாதியர் டிப்ளோமா பெற்றவர்கள் இரண்டாவது சுற்றில், தாதியர் வேலை வெற்றிடங்களுக்கு நேர்காணல் நடத்தப்படுவார்கள் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையின் சுகாதாரத் துறையில் மாத்திரமன்றி மேலும் பல துறைகளிலும் சவுதி அரேபியா தனது பங்களிப்புகளை வழங்கி வருகிறது. பாதைகள் அபிவிருத்தி, குடிநீர் திட்டம் போன்ற பாரிய திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் நோக்கில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் பல்துறை சார்ந்தவர்களை இணைத்து இரு நாடுகளும் நன்மையடையும் விதத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக சவுதி அரேபிய தூதரகத்தின் உத்தியோகபூர்வ X (டுவிட்டர்) பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்.எச் பௌஸுல் அலவி...

# ஐந்து மாநிலங்களுக்கு சூறாவளி சுற்றுப்பயணம் செய்யும் மோடி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று 4 ஆம் திகதி முதல் எதிர் வரும் 6 ஆம் திகதி வரை தமிழ் நாடு உட்பட 5 மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி தெலுங்கானா, தமிழ்நாடு, ஒரிசா, மேற்கு வங்கம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். மார்ச் 4 அன்று காலை 10.30 மணியளவில், தெலுங்கானா மாநிலம் அதிலாபாத்தில் ரூ.56,000 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அதன்பிறகு பிற்பகல் 3.30 மணியளவில் பிரதமர் தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள பாவினி செல்கிறார். பின்னர் சென்னை நந்தனம் வை.எம்.சி. மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்கிறார். மார்ச் 5 அன்று காலை 10 மணியளவில் ஹைதராபாத்தில் சிவில் விமானப் போக்குவரத்து ஆராய்ச்சி அமைப்பின் மையத்தை மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

காலை 11 மணியளவில், தெலங்கானா மாநிலம் சங்காரெட்டியில் ரூ. 6,800 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பிற்பகல் 3.30 மணியளவில், ஒரிசா மாநிலம் ஜஜ்பூரில் உள்ள சண்டிகோலில் ரூ.19,600 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

## மானுடவியல்



155

இங்ஙனநிகழுநாளிலே, திருநனிபள்ளியிற் பிராமணர்கள் பிள்ளையாரை வணங்கி "அடியேங்களெல்லாரும் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமகிருபாலுவாகிய சிவாமி! அடியேங்களுடைய வாசஸ்தானமாகிய திருநனிபள்ளியில் வீற்றிருக்குஞ் சிவபெருமானை வணங்கும்பொருட்டு அவ்விடத்திற்கு எழுந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சிவானுபூதிப் பெருவாழ்வாகிய பிள்ளையார் அதற்கு இசைந்து; தோணியப்பரை வணங்கி, அருள்பெற்று, பிறதலங்களையும் வணங்கச் சென்றார். செந்தாமரை மலரினுஞ் சிறந்த அருமைத்திருவடிகள் தரையின் மேற் செல்வதையும் பிறரொருவர் தாங்குவதையும் பொறாத அன்பினையுடைய சிவபாதவிருதயர் வந்து எடுத்துத் தோளின் மேலே வைத்துக்கொண்டு சென்றார். திருநனிபள்ளிக்குச் சமீபித்த பொழுது, பிள்ளையார் "அந்தச் சோலை தோன்றும் பதி யாது" என்று வினவியருள; தந்தையார் "திருநனிபள்ளி" என்றார். அதுகேட்டு, திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கோயிலை அடைந்து சுவாமியை வணங்கிக் கொண்டு, அந்தஸ்தலத்தில் இருந்தார். பின் அவ்விடத்தினின்று நீங்கி, தலைச்சங்காடு, திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் என்னுந் தலங்களுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, மீண்டு சீர்காழியை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருந்தார். இருக்கு நாளிலே, திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலிய ஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினார்.

இப்படி நிகழும்காலத்திலே, திருநீலகண்டபெரும்பாணர் ஆளுடையபிள்ளையாரைத் தரிசிக்கும்பொருட்டு, விறலியாரோடு யாழ் கொண்டு சீர்காழியிலே வந்து சேர்ந்தார். பிள்ளையார் அவருடைய வரவை அறிந்து, இவரை எதிர்கொள்ள; அவர் பிள்ளையாருடைய திருவடிகளை நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ்செய்தார். பிள்ளையார் அவரை அழைத்துக் கொண்டு, திருக்கோயிற் புறமுன்றிலே சென்று கும்பிடுவித்து, அவரை நோக்கி, "நீர் இங்கே சுவாமிக்கு யாழ் வாசியும்" என்றார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# பிறவியிலிருந்து விடுபட்டு சிவனை அடைய உதவும் மகா சிவராத்திரி விரதம்

மனித மனப்பிரச்சினையை தீர்க்கும் சிவராத்திரி விரதம் அறிவியல் பூர்வ உண்மை. இந்து மதம் என்பது மதம் இல்லை, அது வாழ்வியல் நெறிமுறை, எப்படி ஒரு மனிதன் வாழவேண்டும் என்று சொல்லும் நெறிமுறையை முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள் மூலம் மக்களுக்கு இறைவனால் சொல்லப்பட்ட விதிமுறைகள். என்பதே நிதர்சனமான உண்மை.



சிவராத்திரி என்பது விழா அல்ல! அது, மனதைக் கட்டுப்படுத்தும் மகாவிரதம். அதனால், இதைக் கொண்டாடுகிறோம் என்று சொல்வதை விட, அனுஷ்டிக்கிறோம் என்று சொல்வதே சரி. சிவராத்திரி என்றால் பட்டினி கிடப்பது, கண்விழிப்பது, கோவிலுக்குப் போவதுடன் நின்று விடாமல், இதன் தத்துவம் உணர்ந்து இவ்விரதத்தை அனுஷ்டித்தால், வாழ்க்கை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளலாம். நம் மனம் சந்திரனின் இயக்கத்தை பொறுத்து செயல்படுகிறது. சந்திரன் வளரும் நாட்கள் 15. இதில் தேய்பிறையின், 14வது நாள், அதாவது, அமாவாசைக்கு முந்தைய நாள், சந்திரன் ஏறத்தாழ மறைந்துவிடும். நம் மனமும் இப்படித்தான்... ஒருநாள், ஒன்றை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசை பொங்கும். அடுத்த நாளே, 'அது எதற்கு, அதனால் என்ன பயன்..' என எண்ணி, அந்த எண்ணம் தேய்ந்து போகும். மறுநாளே, 'விட்டேனா பார்..' என்று, அதே ஆசையின் மீது லயிக்க ஆரம்பித்து விடும்; இப்படி நிலையில்லாமல் இருப்பது மனம். சிவராத்திரியை ஏன் தேய்பிறையின் 14ஆம் நாள் அனுஷ்டிக்கின்றனர் தெரியுமா? மனித மனம், ஒரு நிலைப் பட தியானம் அவசியம். அலைபாயும் மனதை, சிவத்தின் மீது வைத்து, எங்கும் போகாமல் கட்டிப் போட வேண்டும். அப்படி கட்டிப் போட்டாலும், அமாவாசைக்கு முந்தைய நாள், சந்திரனின் சிறு கீற்றுப் போல, மனதின் ஏதோ ஒரு மூலையில் முந்தைய ஆசை எண்ணங்களின் சிறு வடிவம் புதைந்து தான் இருக்கும். அதையும் ஒழித்தால் தான், நாம் பிறவியிலிருந்து விடுபட்டு சிவனை அடையமுடியும். அதற்காக சிவனை வழிபடும் நாளே சிவராத்திரி. இந்த தத்துவத்தை உணர்த்தத்தான், சிவனை லிங்க வடிவில் படைத்தனர் நம் முன்னோர். லிங்கத்தின் பாணம் ஏறத்தாழ முட்டையின் வடிவில் இருக்கும். ஒரு முட்டை படம் வரையுங்கள். அதற்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. சுற்றிச் சுற்றிபோய்க் கொண்டே இருக்கும். அதே போன்றுதான் சிவனும், முதலும், முடிவும் இல்லாதவர். மனிதர்களுக்கு அப்படி இல்லை. நமக்கு பிறப்பு என்னும் முதலும், மரணம் என்னும் முடிவும் இருக்கிறது. இது, நாம் செய்யும் பாவ, புண்ணியத்திற்கேற்ப பல பிறவிகளைத் தருகின்றன. சிலர் ஏழு பிறவி என்று மனிதர்களுக்கு கணக்குச் சொல்வர். 'எழுபிறவி' என்பதே சரி! நம் பாவக் கணக்கு கரையும் வரை, மீண்டும் மீண்டும் பூமியில் எழுந்து கொண்டே இருப்போம். பிறவிச் சூழலில் இருந்து விடுபட ஏதாவது வழியிருக்கிறதா என்றால், இருக்கிறது... அதற்கு ஒரு மந்திர வார்த்தையைச் சொல்லியிருக்கின்றனர் முன்னோர்... அதுதான், 'அன்பே சிவம்!' பிற உயிர்களையும் தம்மை போல கருதி அன்பு செலுத்த வேண்டும்.




# பகவான் கிருஷ்ணர் அருளிய பகவத்கீதை ஒரு மருத்துவ களஞ்சியம்







இந்தியாவிலுள்ள ஹரியானா மாநில குருப்பிரிவு அபிவிருத்தி சபையால் வருடாந்தம் நடத்தப்படும் கீதா மஹோற்சவம் அண்மையில் மூன்று நாட்களான கொழும்பு 07, தாமரைத் தடாக மண்டபத்தி்ல் நடைபெற்றது. இதில் முதல் நாள் சித்திரம் வரையும் போட்டியும் ரங்கோலி கோலப் போட்டியும் விநோத உடை போட்டி என்பன நடைபெற்றன. இரண்டாம் நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மதகுருமார்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கிளார்கள். மூன்றாம் நாளாகிய கடந்த சனிக்கிழமை அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளின் நடன நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன. புத்த சாசன சமய கலாசார அமைச்சு, இந்து சமய கலாசார திணைக்களம், இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்து நடத்தினார்கள். இதில் இரண்டாவது நாளில் இடம்பெற்ற கருத்தரங்கின்போது பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

பகவான் கிருஷ்ணர் அருளிய பகவத் கீதையில் நம் வாழ்விற்கு தேவையான அனைத்து விஷயங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொல்லப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒன்று மருத்துவம். உடல் மனம் புத்தி அறிவு, ஆன்மா ஆகிய அனைத்திலும் ஆரோக்கியமாக உள்ள மனிதர்களால் மட்டுமே ஆரோக்கியமான குடும்பமும், ஆரோக்கியமான தேசமும் உருவாகும் எனவே கிருஷ்ணர் தன் கீதையில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

நம் பாரம்பரிய மருத்துவங்களில் பஞ்சபூதங்களுக்கும் அவற்றின் கலப்பினால் உருவாகும் வாதம், பித்தம், கபமாகிய முத்தோஷங்களும் தான் அடிப்படை. உடல் நோய்கள் மட்டுமல்ல மனநோய்களும்கூட இந்த முறைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டே இன்றுவரை மருத்துவம் செய்யப்படுகிறது. இந்த மூன்று தோஷங்களின் கலப்பினால் மனிதர்களுக்கு உருவாகும் சத்துவ, ரஜோ, தமோ குணங்களின் மிகுதி குறைவினால் வரும் இன்ப துன்பங்கள், செயல்பாடுகள், அதனை சரி செய்ய தேவையான உணவு பழக்கவழக்கங்கள், யோகம், தூக்கம், கடைப்பிடிக்கவேண்டிய கட்டுப்பாடுகள் போன்றவற்றை "அர்ஜுனா விஞ்ஞானத்துடன் கூடிய ஞானத்தை கேட்டு நலம் பெறுவாய்" என கீதையில் கிருஷ்ணர் விளக்குகிறார். அத்துடன் மட்டுமல்ல "நான் மருந்தாக ராஜயோகத்தை சொல்கிறேன் கேள், இது நலம் தரக்கூடியது, செய்வதற்கு எளிதானது, கண்கூடாக காணக்கூடியது, சிறிது கடைபிடித்தாலும் பெரும் துன்பத்தில் இருந்து காக்கக்கூடியது" என அதற்கான மனப்பயிற்சியையும் சேர்த்தே நமக்கு சொல்கிறார். கீதையை பொருள் புரிந்து படித்தால் அது நம் அன்றாட வாழ்விற்கு தேவையான உணவு, வாழ்க்கை முறை, மனநலம், ஆன்மீகம் போன்ற பல விஷயங்களை பற்றிய ஆழ்ந்த அறிவை கொடுத்து நம்மை மனிதனில் இருந்து தெய்வமாக உயர்த்தும்.

கீதையை பொருள் புரியாமல் கேட்டாலும், படித்தாலும்கூட அதன் ஸ்லோகங்களில் உள்ள நுண்ணிய அதிர்வலைகள் நம் உடலிலும், மனதிலும் பரவி நமது பஞ்சகோசங்களிலும் வியத்தகும் வகையில் பல நல்ல மாறுதல்களை உருவாக்குகின்றன.

டி ஆர் ஷேஷாத்ரி எழுதியுள்ள "The Curative Power Of The Holy Gita" எனும் புத்தகத்தில் பகவத் கீதையை தினமும் படிப்பதால் உடல், மனம், புத்தி, ஆன்மா ஆகியவை எப்படி நலம் பெறுகின்றன என்பதை பல ஆணித்தரமான ஆதாரங்களுடன் விளக்குகிறார். பகவத் கீதை சர்க்கரை நோய் உட்பட பல வாழ்க்கை முறை மாற்றத்தினால் வரும் நோய்களுக்கு நல்ல தீர்வாகிறது என சமீபத்தில் உஸ்மானியா மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆராய்ச்சியில் பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த டாக்கா மருத்துவ கல்லூரி, மிட்போர்டு மருத்துவமனை, பாகிஸ்தானை சேர்ந்த கான் மருத்துவ பல்கலைக்கழகம் போன்றவையும் இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவருக்கு கீதை :

கீதையில் உள்ள ஆரோக்கிய வழிமுறைகள் நோயாளிகளுக்கு மட்டும் தீர்வு தரவில்லை அது மருத்துவர்களுக்கும் சேர்த்தே சொல்லப்பட்டுள்ளது. இதுவரை கீதையில் உள்ள 3:8, 3:9, 3:16, 3;21, 3:26, 3:33, 4:3, 4:10, 4:17, 4:18, 4:22, 4:28, 4:34, 4:38, 4:39, 5:2, 5:12, 5:14, 5:4, 5:23, 5:27, 5:28, 6:1, 6:5, 6:9, 6:13, 6:16, 10:11, 11:33, 12:13, 12:14, 13:7, 18:7, 18:56, 18:57, 18;63, போன்ற அத்தியாங்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு மருத்துவர் எப்படி செயல்பட வேண்டும், சேவையின் முக்கியத்துவம், எப்படி நோயையும் நோயாளிகளையும் அணுக வேண்டும், கீதையின் அடிப்படையில் மருத்துவம், நிர்வாகம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பல ஆராய்ச்சி கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பகவத் கீதை ஒரு ஆன்மீக நூல் மட்டுமல்ல இது உலக மக்களின் இக வாழ்விற்கும் பரலோக வாழ்விற்கும் வழிகாட்ட இறைவனால் வழங்கப்பட்ட உலகின் உன்னத குரு. கீதை நம் ஒவ்வொருவர் வீட்டிலும் பொக்கிஷமாக பாதுக்காக்கப்பட்டு அனைவரும் தினமும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 78



உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இல்லாமையினாலும் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒரு முகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம். இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்களை துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் செய்வது கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டுவிட்டு செயல்படுத்துவது மட்டுமே நாமாக வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார்.

சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுய நலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும். நீர்கடலிருந்து நீராவியாகி, மழை தரும் மேகம் உருமாறி தவித்த பூமிக்கு மழையாக பொழிந்து, பிறர் நலம் பேணுகிறது. பூமியில் பெய்த மழைநீர் நதிகளாகி, கடலின் மகத்துவத்தை உணர்ந்து அதனுடன் சங்கமிக்கின்றன. மற்றவர்களை இன்பமூட்டவே காற்றும் செயலாற்றுகிறது. சூரியன். சந்திரன். நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் ஒளிவீசுவதும் தனக்காக அல்ல: பிறருக்காக இவ்வாறு இயற்கைகள் யாவும், பிறர் நலம் பேணும் போது மனிதன் மட்டும் சுயநலத்துடன் செயல்படுவது தகுமா?

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

### நட்சத்திரங்களும் – அதிஷ்டம் தரும் தெய்வங்களும்

**19601) அஸ்வினி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சரஸ்வதி தேவி

**19602. பரணி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ துர்கா தேவி (அஸ்ட புஜம்)

**19603. கார்த்திகை நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சரஹணபவன் (முருகப் பெருமான்)

**19604. ரோகிணி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ கிருஷ்ணன். (விஷ்ணு பெருமான்)

**19605. மிருகசீரிடம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சந்திர சூடேஸ்வர் (சிவ பெருமான்)

**19606. திருவாதிரை நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சிவபெருமான்

**19607. புனர்பூசம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ராமர் (விஸ்ணு பெருமான்)

**19608. பூசம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ தட்சிணாமூர்த்தி (சிவபெருமான்)

**19609. ஆயில்யம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஆதிசேசன் (நாகம்மாள்)

**19670. மகம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சூரிய பகவான் (சூரிய நாராயணர்)

**19671. பூரம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஆண்டாள் தேவி

**19672. உத்திரம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ மகாலக்மி தேவி

**19673. அத்தம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ காயத்திரி தேவி

**19674. சித்திரை நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

**19675. சுவாதி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ நரசிம்மமூர்த்தி

**19676. விசாகம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ முருகப் பெருமான்.

**19677. அனுசம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ லக்மி நாரயணர்.

**19678. கேட்டை நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ வராஹ பெருமாள் (ஹயக்கிரீவர்)

**19679. மூலம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஆஞ்சனேயர்

**19680. பூராடம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் (சிவபெருமான்)

**19681. உத்திராடம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ வினாயகப் பெருமான்.

**19682. திருவோணம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஹயக்கிரீவர் (விஷ்ணுப் பெருமான்)

**19683. அவிட்டம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ அனந்த சயனப் பெருமாள் (விஷ்ணுப் பெருமான்)

**19684. சதயம் நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ மிருத்யுஞ்ஜேஸ்வரர் (சிவபெருமான்)

**19685. பூரட்டாதி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ ஏகபாதர் (சிவபெருமான்)

**19686. உத்திரட்டாதி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ மகா ஈஸ்வரர் (சிவபெருமான்)

**19687. ரேவதி நட்சத்திரத்திற்கு அதிஷ்டம் தரும் தெய்வம் எது?**
ஸ்ரீ அரங்கநாதன்.

## வீட்டிலுள்ள தங்கங்களை...

முன்மொழியும் தரப்பினரிடமே தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை தடுப்பதற்காக வரி அதிகரிப்புகளை மிக தயக்கத்துடனேயே அமுல்படுத்தப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார். குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு அப்பால், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்கில் அரசாங்கமும் ஜனாதிபதியும் இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

கண்டி போகம்பர சிறைச்சாலை மைதானத்தில் (01 ) நடைபெற்ற 'ஜயகமு ஸ்ரீ லங்கா' திட்டத்தின் நான்காவது கட்டத்தின் முதலாவது நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை நன்கொடைகள் வழங்கும் வரலாற்றைக் கொண்ட ஒரு தேசமாக இருந்தாலும், வரி செலுத்துவது நாட்டில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாக மாறியுள்ளது. வரிகள் உண்மையில் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன? இலவச சுகாதாரம், தேசிய பாதுகாப்பு, இலவசக் கல்வி ஆகியவற்றுக்கான நிதியைப் பெற ஒரே வழி வரிகள்தான்.

இன்று சிலர் வரி விதிப்பதை எதிர்க்கின்றனர். நாட்டின் பொருளாதார சூழ்நிலை காரணமாக வரிகளை அதிகரிக்க வேண்டியிருந்தது. எனவே, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரியைக் குறைப்பதாக யாராவது கூறினால் வரி விதிக்காமல் அரச சேவைகளை எப்படி வழங்கத் திட்டமிடுகிறார்கள் என்று அவர்களிடம் கேட்க விரும்புகிறோன் . அந்த நேரத்தில் வீடுகளில் உள்ள தங்கத்தை விற்பனை செய்வதன் மூலம் அவர்கள் இந்த சேவைகளுக்கு நிதியளிப்பார்களா?

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் போது, வரிகளை அதிகரிப்பது எமக்கு மிகவும் பாதகமான விடயமாகும். ஏனென்றால், வரியை உயர்த்தும்போது, அரசு அதிகாரிகள் உட்பட வரி கட்ட வேண்டிய மக்கள் அனைவரும் நம் மீது கொந்தளிக்கின்றனர்.

எவ்வாறாயினும், இந்த நாடு மீண்டும் துண்டாடுவதைத் தடுப்பதற்காகவே இந்தத் தீர்மானங்களை எடுத்தோம். இந்த தீர்மானங்களின் அரசியல் பாதகங்கள் எதுவாக இருந்தாலும், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், நாட்டில் இனி பொருளாதார வீழ்ச்சி ஏற்படாதவாறு உறுதி செய்வதற்கும் ஜனாதிபதி இக்கடினமான தீர்மானத்தை எடுத்துள்ளார்.

கடந்த மாதம் அரசாங்கத்தின் வரி வருமானம் எதிர்பார்த்ததை விட அதிகமாக உள்ளது, இதன் மூலம் 300 பில்லியன் ரூபாய் உபரியாக உள்ளது. மத்திய வங்கியால் பணத்தை அச்சிட முடியாத பட்சத்தில், இந்த உபரியை கையிருப்பு நிதியாக வைத்திருக்குமாறு ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

300 பில்லியன் ரூபா உபரியான பணத்தை வரிகளை குறைப்பதன் மூலமோ அல்லது பணத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலமோ ஜனாதிபதி அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்தியிருக்கலாம். இருப்பினும், அவர் நாட்டின் நலனுக்கு முன்னுரிமை அளித்து பணத்தை கையிருப்பில் வைத்திருப்பதைத் தேர்ந்தெடுத்தார். வரவிருக்கும் மாதங்களில் இதேபோன்ற உபரிகளை எதிர்பார்க்கிறோம் மற்றும் 100150 பில்லியன் கையிருப்பை பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோமென்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து, இலங்கைத் தலைவர்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருகின்றனர். இருப்பினும், இந்த தலைவர்களை விமர்சிப்பவர்கள் முன்பு அவர்களின் ஆதரவாளர்களாக இருந்தனர்.

வாக்குகளைஇழந்துவிடுவோமோ என்ற அச்சமின்றி முடிவெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. அரசியல் பேரணிகளுக்கும், பேருந்தில் மக்களை அழைத்து வருவதற்கும் பணம் செலவழிக்க நாங்கள் விரும்பவில்லை.

நாம் விரும்புவது நம் நாட்டை வீழ்ச்சியடைந்த இடத்திலிருந்து முன்னேற்றுவதுதான். நாம் அனைவரும் மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் அப்போதுதான் நாம் வளர்ந்த நாடாக மாற முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(04.03.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:** முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். எதிலும் நிதானித்து முடிவெடுங்கள். நீண்ட காலமாக சந்திக்க நினைத்த ஒரு முக்கிய நபரை சந்திப்பீர்கள்.



**ரிஷபம் :** கொடுக்கல் வாங்கல்களில் சற்று கவனம் தேவை. தேவையற்ற விவாதங்களில் ஒதுங்கி இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.



**மிதுனம்:** எதிலும் நிதானம் தேவை. மறைமுகமாக இருந்து வந்த எதிர்ப்புகள் மறையும். உங்கள் செயல் மற்றவரால் பாராட்டப்படும்.



**கடகம்:** அதிக முயற்சிகளோடு வேலைகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்க்கும் வரவுகள் வந்தாலும் திடீர் செலவுகள் ஏற்படும். எந்த வேலையும் நாளைக்கென்று தள்ளி வைக்காமல் சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள்.



**சிம்மம்:** தீவிர முயற்சியுடன் செயல்களில் ஈடுபடுவீர்கள். சில காரியங்கள் வெற்றி அளித்தாலும் சில காரியங்கள் எதிர்பார்த்தபடி நடக்காமல் போகக்கூடும்.



**கன்னி:** உங்களது சிந்தனைகள் தெளிவாக இருந்தாலும் எடுத்த காரியங்கள் நினைத்த நேரத்திற்குள் முடியாமல் இழுத்தடிக்கலாம்.



**துலாம்:** பணிகளில் அதிக முயற்சியோடு செயற்பட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களும் உறவினர்களும் உங்கள் பணிகளுக்கு தக்க நேரத்தில் உதவியாக இருப்பார்கள்.



**விருச்சிகம்:** உங்கள் செயல்கள் பலவற்றில் தீவிரமாக முயன்று நல்ல பலன்களை பெறுவீர்கள். தளர்வடைந்த செயல்களுக்கு தக்க நபர்களின் உதவியை நாடுவீர்கள்.



**தனுசு:** ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். முயற்சிகள் மூலம் முன்னேற்றமான காரியங்கள் நடைபெறும். கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருப்பது அவசியம்.



**மகரம்:** அதிக முயற்சியோடு செயல்பட்டாலும் எதிர்பார்ப்புக்கு தக்க பலன் கிடைப்பது சந்தேகமே. பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்தாலும் செலவுகள் அதிகமாக இருக்கும்.



**கும்பம்:** உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவார்கள். பணவரவுகள் தேவையான நேரத்தில் வந்து சேரும் .



**மீனம்:** பயணங்களில் கவனம் தேவை. வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் ஏற்படும் சிறு தவறுகளும் உயர் அதிகாரிகளுக்கு பெரிதாக தோன்றுக்கூடும்.

## ஜனாதிபதி புலமைப்பரிசில்...

இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்வது தொடர்பில் கல்வி அமைச்சு வலய/ மாகாணக் கல்வி அலுவலகங்களுக்கும், நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் விசேட சுற்றறிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் வலய மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை அதிபர் தலைமையிலான குழுவினால் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அளவுகோல்களையும், விதிகளையும் கருத்தில் கொண்டு இந்தக் குழுக்கள் தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். மேலும் குழு உறுப்பினர்கள் இந்தச் செயல்பாட்டில் முழு நம்பகத் தன்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது. மேலும், இந்தப் புலமைப் பரிசில் திட்டம் தொடர்பான எந்தவொரு விண்ணப்பமும் நேரடியாக ஜனாதிபதி நிதியத்துக்கு அனுப்பப்படக் கூடாதென ஜனாதிபதி நிதியம் வலியுறுத்துகிறது.

பாடசாலைகளால் தெரிவு செய்யப்பட்ட தகுதியான புலமைப்பரிசில் பெறுவோரின் பட்டியல், விண்ணப்பங்கள் மற்றும் விபரங்கள் கல்வி அமைச்சினால் ஜனாதிபதி நிதியத்துக்கு அனுப்பிய பின்னர், இந்த உதவித் தொகைகள் ஏப்ரல் 2024 முதல் அடுத்த 12 மாதங்களுக்கு வழங்கப்படும்.

## தகவல் தொழில்நுட்பத்துடன்...

தேவையான பின்னணி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தரம் 15 வரை ஆரம்பக் கல்வி நிலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் மேலதிக கற்றலுக்கு கொடுக்கும் அழுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றும், புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்காலத்தில் நடத்தினாலும் அதற்குத் தேவையான சூழல் தயாரிக்கப்படும் எனவும் வகுப்பறைக்கு வெளியே புற செயல்பாடுகளில் மாணவர்களின் திறமையை மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## போரா சமூக...

கள் இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, இலங்கை, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் வாழ்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்புதீன், இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டத்தைப் பாராட்டினார்.

அத்துடன், பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசலை அண்டி நடத்தப்படும் போரா மாநாட்டை இவ்வருடம் நடத்துவது தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த 04 வருடங்களாக போரா சமூகத்தினர் ஆற்றிய சமய சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அடங்கிய புத்தகமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

போரா சமூகத்தின் தலைவர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## இராமாயணம்...

அமைச்சின் ஏற்பாட்டில் இராமாயணம் சித்திரகாவியம் எனும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அயோத்தியில் இராமர் கோவில் திறக்கப்பட்டுள்ளதையடுத்து, இராமாயண காவியத்தின் புகழை உலகறிய செய்யும் நோக்கில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணக்கருவுக்கமைய, இந்திய கலாசார அமைச்சின் ஏற்பாட்டிலேயே இந்நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரின் அழைப்பையேற்று சிறப்பு அதிதியாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து சிறப்பித்தார்.

ஆன்மீக தலைவர்கள், ஆன்மீக செயற்பாட்டாளர்கள், இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி, வெளிநாட்டு தூதுவர்கள், இந்திய அரச அதிகாரிகள், இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் ஷேனுகா செனவிரத்ன மற்றும் அதிகாரிகள், இலங்கையிலிருந்து அமைச்சருடன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தராஜன், அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, பிரத்யேக செயலாளர் மொஹமட் காதர், இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின்...

கழக கல்வி, சட்டக் கல்லூரி அனுபவ பதிவுகளுடன் ஐந்து தசாப்தங்கள் கொள்கை ரீதியான அரசியல் பயணம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை உள்ளடக்கியதாக இந்த நூல் அமைந்துள்ளதாக பாக்கீர் மாக்கார் எம்.பி. தெரிவித்துள்ளார்

## மேலதிக செயலாளர்... (03 ஆம் பக்கதொடர்ச்சி)

அதனையடுத்தே சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜராகி அந்த இரகசிய வாக்குமூலத்தை இன்று 04ஆம் திகதி வழங்குவதற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த சந்தேக நபர், குறித்த சம்பவம் தொடர்பான ஏனைய சந்தேக நபர்களுடன் தடுத்து வைக்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட மஜிஸ்திரேட் நீதவான் அவரை மஹர சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி மருந்து கொள்வனவு சம்பவம் தொடர்பில் 11 மணித்தியாலம் மேற்கொண்ட விசாரணையையடுத்து குற்றத்தெடுப்பு விசாரணைத் திணைக்களம் கடந்த முதலாம் திகதி இரவு சந்தேக நபரான சமன் ரத்னநாயக்கவை கைது செய்து 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது.

## யாழ். இந்திய துணை...

எம்.வி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் வாழ்கின்ற கடற்தொழிலாளர்கள் தொடர்ச்சியாகவே துன்பத்தையே தமது வாழ்க்கையாக வாழ்ந்து, பல சவால்கள் மத்தியிலே உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்திய மீனவர்கள் எங்களுடைய கடல் வளங்களை அழித்துச் செல்கின்றனர். வாழ்வாதாரத்தை சூறையாடி செல்கின்றனர். கடற்றொழில் உபகரணங்களை அழித்து நாசமாக்கிவிட்டு செல்கின்றனர்.

அவற்றை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென யாழில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்தை முற்றுகையிட்டு, கடற்றொழிலாளர்களால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தை ஒரு உணர்ச்சி பூர்வமான போராட்டமாக மாற்ற வேண்டுமாக இருந்தால் அனைத்து கடற்றொழிலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் , சமூக அமைப்புக்கள் என அனைத்து தரப்பும் முழுமையாக பங்குபற்றி வெற்றிபெறச் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொய்யான தகவல்...

போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் கருத்து தெரிவித்த ஷெஹான் சேமசிங்க, அஸ்வெசும நலன்புரி திட்ட பயனாளிகளில் தவறான தகவல்களை அளித்து பயனடைந்த 7000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெறப்பட்ட பணத்தை திரும்பப் பெறவும், தவறான தகவல்களை வழங்குவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு உள்ளது. சரியான தகவலை வழங்குவதில் பயனாளிக்கே பொறுப்பு உள்ளது மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி தகவலை உறுதிப்படுத்துவது மாத்திரமே.

அவர்கள் மீது முன்வைக்கப்பட்ட ஆட்சேபணைகளின் விசாரணையின் போது அடையாளம் காணப்பட்ட அந்த குடும்பங்கள் ஏற்கனவே பயனாளிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். சுமார் 12 லட்சம் மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் இறுதிக்கட்ட பரிசீலனையில் உள்ளன. மேலும், இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. ஏற்கனவே 200,000 அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

## தேசிய வேலைத்திட்ட... (03 ஆம் பக்கதொடர்ச்சி)

விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க, ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், இத்திட்டத்தின் அமுலாக்கமானது விவசாயத்தை வர்த்தக மட்டத்திற்கு கொண்டுவருதல், விவசாய உயிர்ப்பல்வகையைப் பாதுகாப்பது தொடர்பில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக அந்தக் காணிகளின் உரிமைகளை வழங்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பல்வேறு தடைகள் மற்றும் வரம்புகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

அத்துடன், 25 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க, விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களிலிருந்தும் திட்ட முன்மொழிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## யாழ். மீனவர்கள்...

இலங்கை கடல் பகுதிக்குள் அத்துமீறி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இந்திய இழுவை மடி படகுகளை எதிர்த்து கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்வதற்கே யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சமாச பிரதிநிதிகளால் அழைப்பு விடுக்கப்பட்டது.

போராட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து புறப்பட்ட படகுகள் இலங்கையின் கடல் எல்லைக்கு சென்று போராட்டம் நடத்தினர். கடற்றொழிலாளர்களின் போராட்டம் சர்வதேச கடற்பரப்பில் செல்லக்கூடாதென இலங்கை கடற்படை எச்சரிக்கை விடுத்திருந்தது.

## சர்வதேச நாடுகளில்...

அமைச்சு தெரிவித்துள்ளது அதற்கிணங்க கென்யாவிலிருந்து பத்தாயிரம் மெற்றிக் தொன் அரிசிக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை மத்திய கிழக்கின் பல நாடுகளிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கீரிசம்பா அரிசிக்கான வேண்டுகோள் அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு...

பெல்ஜியம் ஏர்லைன் விமானிகளால் இயக்கப்படுகின்றன. இந்த விமானங்களில் 22 Business class இருக்கைகள் மற்றும் 240 Economicclass இருக்கைகளும் உள்ளன. இதற்கு மேலதிகமாக, Fitz Air இன் A.320 ரக விமானமும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸினால் தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## ஆனந்தாநாளந்தா...

காணச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விளையாட்டுப் போட்டியைக் காண வந்த மக்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார். ஜனாதிபதியின் வருகையை நினைவுகூரும் வகையில், கொழும்பு ஆனந்த வித்தியாலய அதிபர் த.லால் திஸாநாயக்க மற்றும் நாளந்த வித்தியாலய அதிபர் இரான் சம்பிக டி சில்வா ஆகியோர் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசில் ஒன்றையும் வழங்கி வைத்தனர்.

## பாகிஸ்தானின் புதிய பிரதமராக...

அந்நாட்டின் நிலைவரங்களும் உலகம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## அரசின் ஒழுங்குபடுத்தல்... (03 ஆம் பக்கதொடர்ச்சி)

கடும் வட்டியுடன் இந்த கடன்களை பெற்றுக்கொண்டுள்ள பெருமளவு மக்கள் தற்போது மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பராடே சட்டத்தை இடைநிறுத்துவதற்காக அரசாங்கத்தினால் நடவடிக்கைகளுக்கு வர்த்தக சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

வர்த்தகர்களின் சொத்துக்களை அவ்வாறு பெற்றுக்கொள்ளும் சட்டத்தை ரத்துச்செய்யும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுப்பது அவசியமாகும்.

அந்தவகையில், இந்த நிலைமைகளை முறைப்படுத்தும் வரை ஆறு மாத காலத்திற்காவது வட்டி தவணைகளை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## UNFPA 50 வருட பூர்த்தி...

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) இந்த நாட்டில் ஐம்பதாண்டுகளைக் குறிக்கும் வகையில் 50 ரூபா பெறுமதியான விசேட நினைவு முத்திரையை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் வெளியிட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முதல் பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீதா அரம்பேபொல, ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஹரிணி அமரசூரிய, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஐ.நா. குடிசன...

ஜப்பான் அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் குடிசன நிதியத்துக்கூடாக இலங்கையின் சுகாதார துறைமேம்பாட்டுக்காக இந்த தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தாய் சேய் சுகாதார அபிவிருத்திப்பிரிவுக்கு ஐந்து இலட்சம் அமெரிக்கன் டொலர் பெறுமதியான மூன்று நவீன லொறிகளும் சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.சுகாதார மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் இந்த நன்கொடைகள் கையளிக்கப்பட்டதுடன் ஐக்கிய நாடுகள் குடிசன நிதியத்தின் ஆசிய வலய பணிப்பாளர் பியோ ஸ்மித் மற்றும் ஜப்பானிய தூதுவராலயத்தின் பதில் உயர்ஸ்தானிகர் கத்சுகீ கொட்டாரோ ஆகியோரால் இந்த நன்கொடை கையளிக்கப்பட்டுள்ளது.

## ரயில் சுரங்கப்பாதை... (03 ஆம் பக்கதொடர்ச்சி)

அங்கு, இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பான பல நீண்ட கால, நடுத்தர கால மற்றும் குறுகிய காலத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

அங்கு சுரகிமு லங்கா தேசிய இயக்கத்தின் தலைவர் பஹியங்கல ஆனந்த சாகர தேரர் மற்றும் சுற்றாடல் அமைப்புகளின் பிரதிநிதிகள் கல்கமுவ பிரதேசத்தில் அதிகளவான யானைகள் நடமாட்டம் உள்ள பிரதேசமாக இனங்காணப்பட்ட இடத்தில் வனவிலங்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டினார்கள்.

அங்கு மஹவயில் இருந்து அநுராதபுரம் வரையான ரயில் பாதையை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் திட்டத்தின் கீழ் 658 லட்சம் ரூபாய் மேலதிக செலவில் இந்த சுரங்கப் பாதையை அமைக்கும் நடவடிக்கையை

இந்திய அரசாங்கத்துக்கு 100% சொந்தமான நிறுவனமான IRCONE, இந்த சுரங்கப்பாதையை கட்ட முன்வந்துள்ளது. திட்டமிடல் உள்ளிட்ட பணிகளுக்கு மத்திய பொறியியல் பணியகம் (cecb) இலவசமாக பங்களிப்பு செய்துள்ளது. மேலும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர், துறையில் நல்ல அனுபவமுள்ள பொறியியலாளர் என்பதால், இத்திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் விரைவாக செயல்படுத்த முடிந்தது.

அதற்கேற்ப, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் அதிக கவனம் இத்திட்டத்தின் மீது செலுத்தப்பட்டுள்ளது. தற்போதும் தினமும் காட்டு யானைகளை அப்பகுதியில் கண்டுகளிக்க ஏராளமான மக்கள் இப்பகுதிக்கு வருவது வழக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## அரச சேவையிலுள்ள... (03 ஆம் பக்கதொடர்ச்சி)

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ ஆதரவுடன் சுகாதார மற்றும் போக்குவரத்துத் துறைகளிலும் பல்வேறு பணியிடங்களிலும் இந்த வழிமுறை ஏற்கனவே முன்னோடி திட்டங்களாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பொது நிறுவனங்களுக்குள் காணப்படும் ஊழியர்களுக்கிடையிலான முறுகல்களை தீர்ப்பதற்கும் முகாமைத்துவ சேவைகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் பணியிடங்கள் மறுசீரமைப்பின் மூலம் பொது சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதும் பொது சேவையின் தரத்தை அதிகரிப்பதும் இந்த பொறிமுறையை செயற்படுத்துவதன் நோக்கமாகும் என்றும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## புத்தளத்தில் ஈரான் கலாசார விழா நாளை

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளத்தில் ஈரான் கலாசார கண்காட்சியும் திரைப்பட விழாவும்

நாளை (05) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் புத்தளம் நுஹ்மான் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புத்தளம் கலாசார மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுக்கு ஈரான் கலாசார நிலையத்தின் கலாசார உயரதிகாரி கலாநிதி பஹுமான் மொஸாமி பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

புத்தளம் ஈரான் உறவுகளை மீண்டும் உயிர்ப்பித்து, மாணவர்களுக்கு UGC அனுமதி பெற்ற பட்டப் படிப்பை உள்ளூரிலே இலவசமாகவும் புலமை பரிசில்களை பெற்றும் உயர்கல்வி கற்கும் சந்தர்ப்பங்களை நாடி முன்னெடுக்கப்படும் முயற்சியாக இது கருதப்படுவதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்க விளையாட்டு மைதானம் புனரமைப்பு

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்க சர்வதேச ஹொக்கி விளையாட்டு மைதானம் ரூ.110 மில்லியன் நிதியுதவியில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார சுற்றுலாத்துறை காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொட, ஆகியோரால் இதற்கான அடிக்கல் நட்டி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்த மாணவன்




**யாழ். விசேட நிருபர்**

பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்த திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் ஹரிஹரன் தன்வந்தை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர் கௌரவித்தனர்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கௌரவிப்பு நிகழ்வில் யாழ்ப்பாணம் வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் உள்ளிட்ட வணிகர் கழக உறுப்பினர்கள், கலந்து கொண்டிருந்தனர்.

தனுஷ்கோடியில் இருந்து பாக்கு நீரிணை வழியாக தலைமன்னார் வரை நீந்தி 13 வயதுடைய ஹரிஹரன் தன்வந் சாதனை நிகழ்த்தினார்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவரான தன்வந், கடந்த 1ஆம் திகதி தனுஷ்கோடியிலிருந்து நீந்த ஆரம்பித்து தலைமன்னாரை வந்தடைந்துள்ளார்.

தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கான 32 கிலோ மீற்றர் தூரத்தை அவர் 9 மணித்தியாலங்கள் 32 நிமிடங்கள் 49 விநாடிகளில் நீந்திக் கடந்து சாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## புதுக்குடியிருப்பில் திருவள்ளுவர் குருபூசை தினம் அனுஷ்டிப்பு

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் திருவள்ளுவர்குருபூசை தினம் நேற்று (03) அனுஷ்டிக்கப்பட்டதுடன், திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் க.முத்துலிங்கம் தலைமையில் இதற்கான நிகழ்வுகள்நடைபெற்றன.

இதன்போது புதுக்குடியிருப்புச் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள

திருவள்ளுவர் சிலையடிவரை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.



இதனைத் தொடர்ந்து முத்துமாரியம்மன் ஆலய வளாகத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பலரும் கலந்து கொண்டு திருவள்ளுவர் குருபூசைத் தினத்தை சிறப்பித்தனர்.

## கேரள கஞ்சா வைத்திருந்த நபரொருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மூன்று கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினை வைத்திருந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவருடைய வாகன சாரதி ஒருவரை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவின் வட்டரெக்கேவ குளத்து வீதியில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் மூன்று கிலோவும் 552 கிராமும் நிறையுடைய கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 39 வயதுடைய கஹட்டகஸ்திகிலிய பகுதியை வசிப்பிடமாக கொண்ட இராணுவத்தின் 1 ஜீ.ஆர் படைப்பிரிவைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி எதிர்வரும் 06 ஆம் திகதி வரைக்கும் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்காக நீதிமன்ற தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

## சாந்தனின் பூதவுடலுக்கு வவுனியாவில் அஞ்சலி



**வவுனியா விசேட நிருபர்**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று அண்மையில் விடுதலையானதை தொடர்ந்து, சுகயீனமடைந்து உயிரிழந்த சாந்தனின் பூதவுடல் நேற்று (03) வவுனியாவில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்ட சாந்தன், சுகயீனம் காரணமாக கடந்த ஜனவரி மாதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் பெப்ரவரி 28ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்நிலையில் சாந்தனின் பூதவுடல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு, நீர்கொழும்பு வைத்திய சாலையில் பிரேத பரிசோதனை இடம்பெற்றது. இதன் பின்னர் இவரது பூதவுடல் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

சாந்தனின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை யாழ். வடமராட்சியிலுள்ள அவரது வீட்டில் நடைபெறும்.


### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மார்ச் 06ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124F071 | LKA18224I064 | LKA36425C076 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 60,000 | 60,000 | 160,000 |

ஏல விற்பனைத் திகதி : 2024 மார்ச் 06
தீர்ப்பனவுத் திகதி : 2024 மார்ச் 11
வழங்கப்படும் திகதி : 2024 மார்ச் 08
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான
இறுதித் திகதியும் நேரமும் : 2024 மார்ச் 06 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



### இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2024.01.29 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி. பீ.ஏ. உதயங்கனி அத்தாட்சிப்படுத்திய 2019.02.26 திகதியிட்ட ஈட்டு முறி இல.444 இன் பேரில் ஹதபானாகல அந்தவெலயாய எனும் முகவரியில் அமைந்த ரிவர் கொடேஜ் இன் இடமிருந்து கடன் வசதி மீது 2023.05.29 இல் உள்ளவாறு ரூ. 8,700,286.07 (எட்டு மில்லியன் எழுநூறு ஆயிரத்து இருநூற்று எண்பத்தாறு ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் ரூ.7,638,887.00 (ஏழு மில்லியன் அறுநூற்று முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபாய்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.05.30 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் மேலும் உப கடன் மீது 2023.05.29 இல் உள்ளவாறு ரூ. 3,639,535.11 (மூன்று மில்லியன் அறுநூற்று முப்பத்தொன்பது ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் பதினொரு சதமும்) அத்துடன் ரூ. 3,253,542.60 (மூன்று மில்லியன் இருநூற்று ஐம்பத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று நாற்பத்திரெண்டு ரூபாய் அறுபது சதம்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்பது மூன்று (6.93%) வீதத்தில் 2023.05.30 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி. பீ.ஏ. உதயங்கனி அத்தாட்சிப்படுத்திய 2019.02.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 444 இன் பேரில் கடன் வசதி மீது ரூ.8,700,286.07 (எட்டு மில்லியன் எழுநூறு ஆயிரத்து இருநூற்று எண்பத்தாறு ரூபாய் ஏழு சதமும்) உப கடன் மீது ரூ.3,639,535.11 (மூன்று மில்லியன் அறுநூற்று முப்பத்தொன்பது ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் பதினொரு சதமும்) அத்துடன் 2023.05.30 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெள்ளவாயக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**ஈட்டுமுறியில் குறிப்பிட்ட அட்டவணை**

1. ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய கோரளை வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவில் அந்தவெலயாய கிராம சேவகர் பிரிவில் யாலபோவ கிராமத்தில் அமைந்த யாலபோவ வத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எம். ரூபசேன தயாரித்த 2009.03.03 திகதியிட்ட வரைபடம் இல. 249 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 2, வடக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எம். ரூபசேன தயாரித்த வரைபடம் இல. 238இல் இக்காணியின் பகுதியும், கிழக்கில் வரைபடம் இல. 249இல் காணித்துண்டுகள் 1 மற்றும் 03உம், தெற்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஜீ.சீ புஷ்பகுமார தயாரித்த வரைபடம் இல. 2080 இல் காணித்துண்டு இல. 68உம் மேற்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஜீ.சீ. புஷ்பகுமார தயாரித்த வரைபடம் இல. 2080 இல் காணித்துண்டு இல. 64உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 249 இன் பிரகாரம் இருபது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.20) அல்லது ஹெக்டெயர் பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து பூச்சியம் ஆறு (ஹெக். 0.0506) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி மொனராகலை மாவட்ட காணிப்பதிவகத்தில் M41/272 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. ஊவா மாகாணம் மொணராகளை மாவட்டத்தில் வெள்ளவாய கோரளை வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவில் அந்தவெலயாய கிராம சேவகர் பிரிவில் யாலபோவ கிராமத்தில் அமைந்த யாலபோவ வத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எம்.ரூபசேன தயாரித்த 2009.02.07 திகதியிட்ட வரைபடம் இல. 238இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 1, வடக்கில் பாதைக்கான ஒதுக்கமும், கிழக்கில் இக்காணியின் பகுதியும், தெற்கில் இக்காணியின் பகுதியும் மேற்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஜீ.சீ. புஷ்பகுமார தயாரித்த வரைபடம் இல. 2080 இல் காணித்துண்டு இல. 64உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 238 இன் பிரகாரம் பதினாறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.16) அல்லது ஹெக்டெயர் பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு பூச்சியம் ஐந்து (ஹெக். 0.0405) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி மொனராகலை மாவட்ட காணிப்பதிவகத்தில் M73/164 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திரு.டபிள்யு.எம்.சீ.பி. வீரசிங்ஹ**
**கிளை முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**வெள்ளவாயக்கிளை**

1975 BOC www.boc.lk A (lka) Fitch Rating, AAA Brand Finance Rating. Bank of Ceylon is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka. Head Office, BOC Square, No.1, Bank of Ceylon Mawatha, Colombo 1. BANK OF CEYLON BOC Bankers to the Nation



**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் வெடுஞ்சாலை அமைச்சு**

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| குச்சவெளி இறக்கண்டி, வாழையூத்து 8 ஆம் வீதியின் மேம்படுத்தல் |
| பலமுபத்துமக மார்கய, பராக்கிரம மாவத்தைக்கு கொல்கிறீட் வழங்கல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கத்தை 2024.03.04 ஆம் திகதியிலிருந்து 2024.04.11 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீஅஅ, திருகோணமலை.**









**பொது அறித்தல்**
**நீதிமன்ற அட்டவணை மற்றும் கலைப்பாளரை நியமித்தல்**

கம்பனியின் பெயர் : ஒபோர்டோ டிவலொப்மன்ட் (பிரைவட் லிமிட்டட்)
பதிவு இலக்கம் : PV-121730
பதிவு அலுவலக முகவரி :இல. 67A, கிரகரிஸ் வீதி, கொழும்பு - 07
கேள்வி இல: CHC/16/2022/CO
மூடப்படும் கட்டளை திகதி: 24 ஒக்டோபர் 2023
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பு
கலைப்பாளரின் நியமனத் திகதி : 13 பெப்ரவரி 2024
கலைப்பாளருக்கான அறிவித்தல் திகதி: 13 பெப்ரவரி 2024
கலைப்பாளரின் பெயர்: கெடவாகண்டகே சுதத் குமார
கலைப்பாளரின் முகவரி: இல. 46, லும்பின மாவத்த, களுகம, களனி.
கலைப்பாளரின் அலுவலக முகவரி: 3ம் மாடி, யதாமா கட்டிடம், இல. 124, காலி வீதி, கொழும்பு - 03

**Repeat Your ad For Better Offers**









# கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30ஆவது வருட ஆண்டு நிறைவு விழா

## பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பங்கேற்பு

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30ஆவது வருட ஆண்டு நிறைவு விழா அண்மையில் த கிரேண்ட் கண்டியன் ஹோட்டலில் தலைவர் எம். எச் சலீம்டீன் தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் முதலாம் நிலைச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எச். ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம் ஆகியோர்களுடன் பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், முன்னாள் கண்டி மாநகர முதல்வர் கேசர சேனநாயக என முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி பொதுச் செயலாளர் ஏ. சி. எம். ரகுமான் நன்றியுரை நிகழ்த்தினார். இதன்போது, கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் மூத்த ஸ்தாபக உறுப்பினர்கள், நீண்டகாலமாக உறுப்பினர்களாக இருந்து சங்கத்திற்குச் சேவையாற்றியவர்கள், கண்டியில் 100 ஆண்டுகளுக்கு மேல் வர்த்தகத்துறையில் பங்காற்றியவர்கள், கண்டியில் வர்த்தகத் துறையில் சாதனை நிலைநாட்டியவர்கள், இளம் வர்த்தக சாதனையாளர்கள், சங்கத்தின் முகாமைத்துவக் குழு, சமூக சேவையாளர்கள் போன்ற பல பிரிவுகளை சார்ந்தவர்கள் உயர்தர விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இக்பால் அலி...



























# இலங்கையின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்தும் உதவ சவுதி உறுதி

## விஷேட அழைப்பின் பேரில் சவுதி சென்று திரும்பியுள்ள அல் ஹிக்மா நிறுவனப் பணிப்பாளர் ஷேஹுத்தீன் மதனி

**சவுதி அரேபிய அரசாங்கத்தின் விஷேட அழைப்பை ஏற்று ஒரு வார காலம் சவுதி சென்று திரும்பியுள்ள அல் ஹிக்மா நலன்புரி அமைப்பின் பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி தினகரனுக்கு விஷேட நேர்காணலொன்றை அளித்துள்ளார். அப்பேட்டியை இங்கு தருகின்றோம்.**







**கேள்வி : உங்களைப் பற்றியும் உங்களது நிறுவனம் குறித்தும் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

பதில் : ஆம். உலகின் முக்கியத்துவம் மிக்க நாடாகவும் இஸ்லாமிய உலகின் தலைமைத்துவ நாடாகவும் விளங்கும் சவுதி அரேபியாவின் மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை மேற்கொண்டு பி.ஏ பட்டம் பெற்றுக் கொண்டுள்ள நான், அந்நாட்டின் இஸ்லாமிய விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இஸ்லாமிய வழிகாட்டல் மத்திய நிலையத்தில் சுமார் 7 வருடங்கள் இஸ்லாமிய அழைப்பாளராக (தாஇஈ) கடமையாற்றினேன். அதனைத் தொடர்ந்து தாய்நாட்டுக்கு திரும்பிய நான் இந்நாட்டு மக்களுக்கு சவுதி அரேபியா ஊடான மனிதாபிமான சேவைகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் அல் ஹிக்மா நலன்புரி நிறுவனத்தை 2006 இல் ஸ்தாபித்தேன். அன்று தொடக்கம் இந்நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்து சவுதி ஊடாக இந்நாட்டுக்கும் மக்களுக்கும் எம்மாலான சேவைகளைப் பெற்றுக் கொடுத்து வருகின்றேன்.

**கேள்வி : சவுதி அரேபியாவின் விஷேட அழைப்பை ஏற்று நீங்கள் சவுதி சென்று திரும்பியுள்ளதாக அறிகிறோம். உங்களை அழைத்தமைக்கான நோக்கம் மற்றும் விஜயம் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்?**

பதில் : ஆம். சவுதி அரேபியாவின் இஸ்லாமிய விவகார மற்றும் வழிகாட்டல் அமைச்சர் கலாநிதி அப்துல் லத்தீப் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கின் விஷேட அழைப்பின் பேரில் அந்நாட்டின் விஷேட விருந்தினராக நான் சென்று திரும்பியுள்ளேன்.

இவ்வழைப்பின் நோக்கமானது சவுதி அரேபியா, இலங்கை உட்பட உலகெங்கிலும் அளப்பரிய மனிதாபிமான மற்றும் உட்கட்டமைப்பு சேவைகளை முன்னெடுத்து வருகிறது.

களனி, சபுகஸ்கந்த, CPC சுத்திகரிப்புப் பிரிவின் பயிற்சி நிலையத்தில் 2024 மார்ச் 14 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் அனைத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் (பிரதிநிதிகளின் அதிகபட்சம் 2 உறுப்பினர்கள்) பங்கேற்கலாம்.

சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் திட்டங்கள்) இடமிருந்து விலைமனு ஆவணங்கள் மற்றும் மற்ற விபரங்களை பெற முடியும்.

விலைமனு ஆவணங்களை www.ceypetco.gov.lk என்ற இணையதளத்தில் வாசிக்க முடியும்.

**தொலைபேசி - 0094-11-5668564/ 0094-11-2401359**
**தொலைபேசி - 0094-11-2401359/ 0094-11-2400431**
**தலைவர் (DPC கனிஷ்ட)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு**
**சபுகஸ்கந்த**

**தேசிய போட்டி ரீதியிலான**
**விலைமனுக்களுக்கான அழைப்பு**

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு பிரிவு

**பகிரங்கக் கேள்வி – 4501T**

**40,000 எண்ணிக்கையான 19 லீற்றர் குடிநீர் போத்தல்களை வழங்குதல் (2024-2025)**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2024 மார்ச் 18ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 மார்ச் 20ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**





## பங்களாதேஷ் டி20 தொடர்:

# ஹசரங்க, நிசங்க இல்லாமல் முதல் டி20 போட்டியில் இலங்கை இன்று களத்தில்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் முதல் போட்டி இன்று (04) சில்ஹட்டில் நடைபெறவுள்ளது.

முழுமையான கிரிக்கெட் சுற்றுப்பயணம் ஒன்றாகவே இலங்கை அணி பங்களாதேஷ் பயணித்துள்ளது. இதில் ஆரம்பத்தில் மூன்று டி20 போட்டிகளில் ஆடும் இலங்கை அணி தொடர்ந்து மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. எனினும் எதிர்வரும் ஜூன் மாதத்தில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முன் இலங்கை அணி ஆடும் கடைசி டி20 தொடர் இதுவென்பதால் முக்கியமானதாக உள்ளது.

டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்க இலங்கை அணியுடன் பங்களாதேஷ் சென்றபோதும் போட்டித் தடை காரணமாக முதல் இரு டி20 போட்டிகளிலும் ஆடவில்லை. இதனால் உப தலைவர் சரித் அசலங்க அணித்தலைவராக செயற்படவுள்ளார். எனினும் ஹசரங்க மூன்றாவது போட்டியில் களமிறங்க எதிர்பார்த்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அண்மையில் நடந்த டி20 தொடரில் ஹசரங்கவின் சகலதுறை ஆட்டமே இலங்கை அணி தொடரைக் கைப்பற்ற உதவியது. இந்நிலையில் அவர் இல்லாதது அணிக்கு பெரும் இழப்பாக அமையும்.

ஹசரங்கவின் இடைவெளியை நிரப்பும் வகையில் ஜெப்ரி வன்டர்சேவை டி20 குழாத்துக்கு தேர்வுக் குழுவினர் அழைத்துள்ளனர். வன்டர்சே கடைசியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே டி20 சர்வதேச போட்டி ஒன்றில் ஆடினார். அதேபோன்று முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களாக அகில தனஞ்சய மற்றும் மஹீஷ் தீக்ஷன இன்றைய போட்டியில் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் சோபித்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்கவும் பங்களாதேஷுக்கு எதிரான டி20 தொடரில் காயம் காரணமாக இடம் பெறவில்லை என்பதோடு அவருக்கு பதில் அணியில் இடம்பெற்றிருக்கும் அவிஷ்க பெர்னாண்டோ இன்றைய போட்டியில் களமிறங்க வாய்ப்பு உள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சோபித்த அவிஷ்க இலங்கைக்காக கடந்த ஓர் ஆண்டுகளில் டி20 போட்டிகளில் ஆடியதில்லை. என்றாலும் அவர் ஆரம்ப வரிசையில் அதிரடியாக ஆடக் கூடியவராவார்.

டி20 குழாத்தில் இடம்பெற்றிருந்த குசல் ஜனித் பெரேரா சுகவீனம் காரணமாக விலகிய நிலையில் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் திக்வெல்ல இடம்பெற்றுள்ளார். எனினும் இன்றைய போட்டியில் கமிந்து மெண்டிஸ் அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசையில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீரவும் உபாதை காரணமாக அணியில் இடம்பெறாத சூழலில் டில்ஷான் மதுஷங்க, பினுர பெர்னாண்டோ இன்று களமிறங்கலாம்.

மறுபுறம் பங்களாதேஷ் குழாத்தில் இடம்பெற்றிருந்த புதுமுக வீரர் அலிஸ் இஸ்லாம் விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளார். நடந்து முடிந்த பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரிலேயே அவரது மர்மப்பந்து வீச்சு தேர்வாளர்களின் அவதானத்தை பெற்றது.

எனினும் தனது சொந்த மண்ணில் ஆடுவதால் பங்களாதேஷ் அணிக்கு மேலதிகமான சாதகத்தை தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் தொடரும் தாக்குதல்களுக்கு மத்தியிலும் 'போர் நிறுத்த' எதிர்பார்ப்பு

## காசாவுக்கு முதல்முறை உதவிகளை வீசியது அமெரிக்கா

எதிர்வரும் ரமலான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றுக்கான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கும் சூழலில், போர் நீடிக்கும் காசாவுக்கு அமெரிக்கா முதல் முறை மனிதாபிமான உதவிகளை வானில் இருந்து வீசியுள்ளது.

எனினும் காசாவில் பலஸ்தீன போராளிகள் மற்றும் இஸ்ரேலிய துருப்புகள் இடையே மோதல் நீடிப்பதோடு பொதுமக்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் இடைவிடாது தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபாவின் மருத்துவமனை ஒன்றுக்கு அருகில் இடம்பெயர்ந்தவர்களின் கூடாரங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்தனர்.

இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பை இலக்கு வைத்து மருத்துவமனைக்கு அருகில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியபோதும், இந்தத் தாக்குதல் மூர்க்கத்தனமானது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் எக்ஸ் சமூகதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ரபாவில் உள்ள மூன்று மாடி வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் சனிக்கிழமை இரவு நடத்திய தாக்குதலில் ஆறு சிறுவர்கள் உட்பட 14 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

தெற்கு நகரான கான் யூனிஸின் ஹமத் பகுதியை நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் முன்னோறுவதை ஒட்டி அங்கு உக்கிர வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. வடக்கு மற்றும் மத்திய காசாவில் மேலும் உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக வபா கூறியது. ஜபலியா அகதி முகாமில் உள்ள வீடுகள் மற்றும் அல் நுஸைரத் முகாமில் இருக்கும் வீடுகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் பல டஜன் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 117 பேர் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்று 72 மணி நேரத்தின் பின் காசா நகரின் நப்லூஸில் அவ்வாறே உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் துருப்புகள் மீண்டும் ஒரு முறை சூடு நடத்திய சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதன்போது மேலும் மூவர் காயமடைந்ததாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

கிட்டத்தட்ட ஐந்து மாதங்களாக நீடிக்கும் இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,500ஐ நெருங்கி இருப்பதோடு மேலும் 71 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

### கெய்ரோவில் மீண்டும் பேச்சு

எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி முஸ்லிம்களின் புனித ரமலான் மாதம் ஆரம்பிக்க உள்ள நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இன்றைய தினத்திற்குள் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதற்காக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தூதுக்குழுக்கள் இன்று கெய்ரோவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எகிப்தின் இரு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது. எனினும் தற்போது ஹமாஸின் பிடியில் உயிருடன் இருக்கும் பணயக்கைதிகளின் முழு விபரம் கிடைக்கும் வரை இஸ்ரேல் தனது தூதுக் குழுவை கெய்ரோவுக்கு அனுப்பாது என்று மற்றொரு தரப்பு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஹமாஸுடனான போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை இஸ்ரேல் பரந்த அளவில் அங்கீகரித்திருப்பதாக அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் தமது பிடியில் இருக்கும் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பணயக்கைதிகளை விடுப்பதற்கான செய்தியை வெளியிட்டால் ஆறு வாரங்கள் கொண்ட போர் நிறுத்தம் ஒன்று உடன் ஆரம்பிக்கப்படும் என்று அந்த அதிகாரியை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

'இஸ்ரேல் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அதனை ஏற்றுக் கொள்கிறது' என்று குறிப்பிட்ட அந்த அதிகாரி, தற்போது ஹமாஸின் கைகளிலேயே முடிவு உள்ளது என்று குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய பலஸ்தீன போராளிகள் சுமார் 250 பேரை பணயக்கைதிகளால் பிடித்தனர். இதில் தொடர்ந்து 130 பேர் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இவர்களில் 30 பேர் உயிரிழந்திருப்பதாக இஸ்ரேல் சந்தேகிக்கிறது.

இந்நிலையில் பணயக்கைதிகள் தொடர்பில் ஹமாஸின் பதிலை எதிர்பார்த்து இஸ்ரேல் காத்திருப்பதாக இஸ்ரேலிய மூத்த இராஜதந்திர அதிகாரி ஒருவர் இஸ்ரேலின் ஹாரட்ஸ் பத்திரிகைக்கு குறிப்பிட்டுள்ளார். பணயக்கைதிகள் யார் யாரை விடுவிப்பது என்பதே முக்கிய விடயமாக உள்ளது. இவர்களில் எத்தனை பேர் உயிருடன் இருக்கிறார்கள் அல்லது இல்லை என்பது அடங்கும். அதேபோன்று கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையில் எத்தனை பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படும் என்ற விடயமும் இதில் முக்கியமாக உள்ளது என்றும் அந்த இராஜதந்திரியை மேற்கோள்காட்டி ஹாரட்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.



எவ்வாறாயினும் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் ஹமாஸ் அமைப்பின் நிபந்தனைகளை இஸ்ரேல் ஏற்றால் அடுத்த 24 தொடக்கம் 48 மணி நேரத்தில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படலாம் என்று மூத்த ஹமாஸ் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் வடக்கு காசாவுக்கு திரும்புவது மற்றும் மனிதாபிமான உதவிகள் அதிகரிப்பது உட்பட ஹமாஸின் நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் இணங்கினால் அடுத்த 24 தொடக்கம் 48 மணி நேரத்திற்குள் உடன்பாடு ஒன்றுக்கு வழி ஏற்படும்' என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தற்காலிமானதன்றி முழுமையான போர் நிறுத்தம் ஒன்றுக்கும் எமது மக்கள் மீதான ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவரவுமே ஹமாஸ் வலியுறுத்துகிறது என்று லெபனானை தளமாகக் கொண்ட ஹமாஸ் அதிகாரி ஒசாமா ஹம்தான் அல் அரபியா தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசு பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இஸ்ரேலுக்குள் கடும் அழுத்தத்தை சந்தித்து வருகிறது. இது தொடர்பில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பாரிய பேரணிகள் கடந்த சனிக்கிழமையும் டெல் அவிவ் மற்றும் ஜெரூசலத்தில் இடம்பெற்றன.

### அமெரிக்காவின் உதவி

முற்றுகையில் உள்ள குறுகிய நிலப்பகுதியான காசாவில் மனிமாபிமான நெருக்கடி மோசமடைந்து வரும் சூழலில் காசாவில் பஞ்சம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் அண்மைய நாட்களில் காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் குறைந்தது 16 சிறுவர்கள் உயிரிழந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடிக்கு மத்தியில் அமெரிக்க இராணுவ விமானங்கள் பாராசூட் மூலம் 38,000க்கும் அதிகமான உணவுப் பொதிகளை காசாவுக்கு வானில் இருந்து போட்டதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் குறிப்பிட்டுள்ளது. ஐரோப்பிய மற்றும் அரபு நாடுகளை அடுத்தே காசாவுக்கு அமெரிக்காவும் வானில் இருந்து உதவிகளை போட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறான நடவடிக்கைகள் தரையில் இருந்து உதவிகளை விநியோகிப்பதை ஈடு செய்யாது என்று அதிகாரிகள் மற்றும் உதவிக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காசாவில் கடுமையான உணவு பாதுகாப்பின்மை ஏற்பட்டிருப்பது குறித்து கவலையை வெளியிட்டிருக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை, உதவி விநியோகங்களை எடுத்துச் சென்ற வாகனங்களை நோக்கி ஒன்று திரண்ட மக்கள் மரணத்தை எதிர்கொண்டதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்புச் சபை கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், 'பொது மக்களை பாதுகாப்பதற்கு அனைத்து தேவையான நடவடிக்கைகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்றும் மனிதாபிமான உதவிகளை உடனடி, விரைவான, பாதுகாப்பான, நீடித்த மற்றும் தடையின்றி வழங்குவதை அனுமதிக்கவும், எளிதாக்கவும் மற்றும் செயல்படுத்தவும் மோதலில் உள்ள தரப்பினரை வலியுறுத்தியது.

உதவிக்காக கூடியவர்கள் கொல்லப்பட்ட இந்த சம்பவர் தொடர்பில் விசாரணை ஒன்றை நடத்த பல உலக நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. கடந்த வியாழக்கிழமை நடந்த இந்த சம்பவத்தில் 117 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது பொதுமக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் சூடு நடத்தியதாக அந்த அமைச்சு குறிப்பிடும் அதேநேரம், இதில் பெரும்பாலானவர்கள் நெரிசலில் சிக்கியே உயிரிழந்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறுகிறது.

எனினும் காசா நகர மருத்துவமனைக்கு சென்ற ஐக்கிய நாடுகள் குழுவொன்று, துப்பாக்கி காயங்களுடன் பெரும் எண்ணிக்கையானவர்களை கண்டதாக தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி வேட்பாளராவதை நெருங்கும் டொனால்ட் டிரம்ப்



மூன்று மாநில தேர்தல்களில் அமோக வெற்றியீட்டி இருக்கும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகுவதை நெருங்கியுள்ளார்.

குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மிசூரி, மிச்சிகன் மற்றும் இடாஹோ கோகசஸ் மாநிலத் தேர்தல்களிலேயே டிரம்ப் வெற்றியீட்டியுள்ளார்.

இந்நிலையில் நாளை செவ்வாய்க்கிழமை 'சுப்பர் டியுஸ்டே' வருகிறது. 15 மாநிலங்களிலும் ஒரு வட்டாரத்திலும் தேர்தல் நடைபெறும். அவற்றில் வெற்றி பெற்று டிரம்ப் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை உறுதிசெய்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுக் கட்சி வேட்பாளராக அவரை எதிர்த்து நிற்கும் நிக்கி ஹேலி இதுவரை ஒரு மாநிலத்தில்கூட வெற்றி பெறவில்லை.

எனினும் தோல்வியை ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்றும் தொடர்ந்து போட்டியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நன்கொடையாளர்களுக்கு நன்றி கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் பதவியில் உள்ள ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிட எதிர்பார்த்துள்ளார்.

# பாகிஸ்தான் பிரதமராக ஷெஹ்பாஸ் நியமனம்



பாகிஸ்தான் பிரதமராக ஷெஹ்பாஸ் ஷரீப் இரண்டாவது தவணைக்கு அந்நாட்டு பாராளுமன்றத்தால் நேற்று நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்திற்கு எதிராக தற்போது சிறை அனுபவிக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு எம்.பிக்கள் கோசம் எழுப்பினர்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஷெஹ்பாஸ் அதிகபட்சமாக 201 வாக்குகளை வென்றதோடு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இம்ரான் கான் ஆதரவாளர் ஒமர் அயூப் 92 வாக்குகளை வென்றார். இதில் வெற்றி பெறுவதற்கு அதிகபட்சம் 169 பெரும்பான்மை வாக்குகளை வென்றால் போதுமாக இருந்தது.

பாகிஸ்தானில் கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் இம்ரான் கான் ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் பெரும்பான்மை இடங்களை வென்றபோதும் ஆட்சி அமைப்பதற்கு போதுமான ஆசனங்களை கைப்பற்ற தவறினர். இதனையடுத்து அந்தத் தேர்தலில் இரண்டாம் இடம்பெற்ற ஷெஹ்பாஸின் மூத்த சகோதரர் நவாஸ் ஷரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி கூட்டணி அரசொன்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஷெஹ்பாஸ் தனது இரண்டாவது தவணைக்கான இன்று (04) பிரதமராக பதவி ஏற்கவுள்ளார்.

# ஹூத்தி தாக்குதலினால் சரக்குக் கப்பல் மூழ்கியது



அதென் வளைகுடாவில் இரண்டு வாரங்களுக்கு முன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான பிரிட்டனில் பதிவு செய்யப்பட்ட சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியுள்ளது.

ருபிமார் என்ற இந்தக் கப்பல் நீரில் தத்தளித்து வந்த நிலையில் தாக்குதலுக்கு உள்ளாகி சில நாட்களின் பின் மூழ்கியதாக யெமனின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசு குறிபிட்டுள்ளது. செங்கடலில் உள்ள கப்பல்களை இலக்கு வைத்து யெமன் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை ஆரம்பித்த பின்னர் மூழ்கிய முதல் கப்பல் இதுவாகும்.

உரத்தை எடுத்துச் சென்ற இந்தக் கப்பல் மூழ்கியது சூற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தக் கப்பல் பாப் அல் மன்தாப்புக்கு அருகில் அதென் வளைகுடாவில் இருந்த போதே யெமனைத் தளமாகக் கொண்ட ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் இரு ஏவுகணை தாக்குதலுக்கு இலக்கானது. அந்த கப்பலில் இருந்த 24 பேரும் மீட்கப்பட்டதாக பிரிட்டிஷ் அரசு பத்து நாட்களுக்கு முன் தெரிவித்தது.

172 மீற்றர் நீளமான இந்தக் கப்பல் பிளைஸ் கொடியுடன் லெபனான் நிறுவனம் ஒன்றினால் இயக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலவுதவி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு

## மத்திய மாகாணம்

**பெறுகை அமைப்பு** : பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கண்டி
**செயற்றிட்டப் பெயர்** : ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறை வலுவூட்டல் செயற்றிட்டம், உலக வங்கி/அரசாங்க நிதி
**பெறுகைத் தலைப்பு** : மருத்துவ மற்றும் மருத்துவம் சாராத உபகரணங்களின் பெறுகை-2024
**ஒப்பந்த இல.** : CPC/RDHS/KY/F13-1/NCB/1/2024, CPC/RDHS/KY/F13-2/NCB/2/2024
**பிரசுரிப்புத் திகதி** : 2024.03.01

01. ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறை வலுவூட்டல் செயற்றிட்டமானது ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளை அதிகரிக்கும் நோக்குடன் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் அதியுயர் இடர் விளைவிக்கக்கூடிய தொற்றாநோய்களின் கண்டுபிடித்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் தன்மையில் அமுல்நடாத்தப்படுகின்றது.
02. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ/மருத்துவம் சாராத உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
03. விலைமனுக்கோரல் ஆவணங்களில் விலைமனுதாரரின் தகுதித்தன்மை மற்றும் தகைமைத் தேவைப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
04. ஒவ்வொரு வகுதிக்கும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், 2024.03.01 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2024.03.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 081-2236452 என்ற தொலைபேசியூடாக அல்லது rdhskandysupply123@gmail.com என்ற இலத்திரனியல் மின்னஞ்சலூடாக கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் கணக்காளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் பெற்று கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் நிதிப்பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
06. கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் புகழ்வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதப் பாங்கில் அமைந்துள்ள விலைமனுப் பிணையொன்றுடன் அல்லது கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்தப்பட்ட ரொக்கப் பணத்திற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் 2024.03.12 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
08. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024.03.22 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் 'தலைவர், பெறுகைக் குழு, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், த.பெட்டி 56, எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வகுதிப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
09. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அல்லது நேரடியாக சமுகமளித்திருக்கும் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடைபெறவுள்ள விலைமனு திறத்தலின் ஒன்லைனில் உடனடியாகவே திறக்கப்படும்.
10. சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

| S. No. | Name of the Item | No. of Units | Non-Refundable Document Fee (Rs.) | Bid Security (Rs.) |
|---|---|---|---|---|
| **Medical Equipment** | | | | |
| **Category No. 01: Critical Care Equipment** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-1/2024** | | | | |
| 01-01 | Suction Apparatus (Single Jar) | 2 | 5,000.00 | 30,600.00 |
| 01-02 | Suction Apparatus (Double Jar) | 2 | | |
| 01-03 | Nerve Stimulator | 1 | | |
| **Category No. 02:Lab Analyzer - Chemical Pathology** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-2/2024** | | | | |
| 02-01 | Centrifuge (48 Basket) | 1 | 5,000.00 | 154,000.00 |
| 02-02 | Centrifuge (16 Basket) | 3 | | |
| 02-03 | Hot Air Oven | 6 | | |
| 02-04 | Water Distiller | 3 | | |
| 02-05 | Electrolyte Machine | 1 | | |
| **Category No. 03: Imaging Equipment** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-3/2024** | | | | |
| 03-01 | Konika Minolta Image Plate (Size 14*17 inches) | 2 | 5,000.00 | 20,200.00 |
| **Category No. 04: Sterilizing Equipment** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-4/2024** | | | | |
| 04-01 | Mini Autoclave | 4 | 5,000.00 | 56,000.00 |
| **Category No. 05: Hospital Furniture** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-5/2024** | | | | |
| 05-01 | Dressing Trolley | 25 | 5,000.00 | 50,500.00 |
| 05-02 | Patient Trolley | 4 | | |
| 05-03 | Instrument Trolley | 6 | | |
| 05-04 | Medicine Trolley | 6 | | |
| 05-05 | Bed Head Table | 10 | | |
| 05-06 | Dispenser Chair | 7 | | |
| 05-07 | Wheel Chair | 3 | | |
| **Category No. 06: Diagnostic Equipment** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-6/2024** | | | | |
| 06-01 | Sphygmomanometer - Aneroid | 78 | 5,000.00 | 55,120.00 |
| 06-02 | Stethoscope | 13 | | |
| **Non Medical Equipment (Furniture)** | | | | |
| **Category No. 01: Office Furniture (1)** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-1/2024** | | | | |
| 01.01 | Office Cupboard Large with Glass Door | 13 | 3,000.00 | 23,250.00 |
| 01.02 | Steel Filing Cabinet | 6 | | |
| **Category No. 02: Office Furniture (2)** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-2/2024** | | | | |
| 02.01 | Executive Chair | 7 | 3,000.00 | 42,750.00 |
| 02.02 | Hybrid Chair | 285 | | |
| **Category No. 03: Office Furniture (3)** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-3/2024** | | | | |
| 03.01 | Office Table | 14 | 3,000.00 | 10,620.00 |
| 03.02 | Computer Table | 4 | | |
| **Non Medical Equipment (Electrical)** | | | | |
| **Category No. 04: Electrical Equipment (1)** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-4/2024** | | | | |
| 04.01 | Air Conditioner | 10 | 5,000.00 | 97,940.00 |
| 04.02 | Refrigerator | 3 | | |
| **Category No. 05: Electrical Equipment (2)** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-5/2024** | | | | |
| 05.01 | Photocopier Machine | 10 | 5,000.00 | 117,764.00 |
| 05.02 | UPS | 54 | | |
| 05.03 | Printers | 75 | | |
| 05.04 | FAX Machine | 10 | | |
| **Category No. 06: IT Equipment** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-1/NCB/2-6/2024** | | | | |
| 06.01 | Desktop Computer | 38 | 5,000.00 | 227,000.00 |
| 06.02 | Laptop Computer | 5 | | |
| **S. No.** | **Name of the Item** | **Quantity** | **Non-Refundable Document Fee (Rs.)** | **Bid Security (Rs.)** |
| **Category No. 07: Stationery** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-2/NCB/2-7/2024** | | | | |
| 07.01 | White Paper (A4 210x297 mm) (80gsm) | 2000 | 5,000.00 | 100,000.00 |
| 07.02 | White Paper (Legal 8 1/2x14") | 250 | | |
| **Category No. 08: Toners** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-2/NCB/2-8/2024** | | | | |
| 08.01 | Specific Toners for the office Printers (Requirement attached with the bid document) | 200 | 5,000.00 | 120,000.00 |
| **Category No. 09: Drugs Envelope** | | | | |
| **Contract No.: CPC/RDHS/KY/F13-2/NCB/2-9/2024** | | | | |
| 09.01 | Drugs Envelope (10cm x 6.5cm ) | 10 Mn | 5,000.00 | 250,000.00 |
| 09.02 | Drugs Envelope (13cm x 10cm) | 5 Mn | | |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம்,**
**எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை.**
**போகம்பர, கண்டி.**
2024.02.29

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
# பொறியியல் திணைக்களம்

## கேள்விமனுக்கோரல் (IFB)

1. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மகாநகர சபையின் நகராட்சி ஆணையாளரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. I). தேசிய போட்டி முறையிலான மனுக்கள் கோரப்படும், மேலும் இந்த கொள்முதலின் கீழ் உள்ள பணிகளுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி (VAT மற்றும் பிற வரிகள் தவிர்த்து) **ரூ.50** க்கு குறைவாக இருந்தால், அரச நிதிச் சுற்றறிக்கை எண். 04/2016(ii) ன் படி பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர விருப்பத்தேர்வு பொருந்தும்.

   II). இந்த பெறுகைக்கு அரச நிதிச் சுற்றறிக்கை எண் 03/2020(i) இந்த ஆவணத்திற்கு உரித்துடையது மேலும் அரசுச் சொந்தமான நிறுவனங்களுக்காக (SEO) கேள்விக்கோரினால், ஐந்து சதவிகிதம் (5%) முன்னுரிமை அளிக்கப்படும்.

3. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, மனுதாரர் பதிவு செய்யப்படாதவராக இருக்கக் கூடாது மேலும் கீழே உள்ள அட்டவணையிலும் ஏல ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

| தொடர் இல (1) | பணி விபரம் (2) | CIDA பதிவு (3) | மீள்ச் செலுத்தப்படாத கட்டணம் ( 4) | மனுப் பாதுகாப்பு / பண வைப்பு (5) | மனு ஆவணங்கள் வழங்கும் மற்றும் சமர்ப்பிக்கும் இடம் மற்றும் தொலைபேசி இல. (6) |
|---|---|---|---|---|---|
| | இராஜகிரிய மக்கள் வங்கிக்கு அருகில் பல்நோக்கு மற்றும் சுயதொழில் மையம் (சமுத்திரதேவி) கட்டுமானம் | C 5 | 15,000.00 | 480,000.00/ 240,000.00 | **மாநகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை. த.பெ.இல 6, ஸ்ரீ ஜயவர்தனபுர, த.பெ. - 011-2862173 பெக்ஸ். - 011-2874703** |

4. கட்டமைக்கப்பட்ட உருக்கு கட்டிட கட்டுமானம் மற்றும் உருக்கு கட்டமைப்புகளை நிறுவுதல் (Steel Buildings Fabrication and Erections) ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்களுக்கு முன்னுரிமை மனுதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பொறியாளர் திணைக்களத்திடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம், மேலும் மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.

5. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பொறியியலாளர் (அட்டவணையின் நெடுவரிசை எண் 06 இல் உள்ளவாறு) எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் **2024.03.04** ஆம் திகதி முதல் **2024.03.25** ஆம் திகதி வரை எந்த ஒரு அலுவலக நாட்களிலும் **மு.ப.9:00 மணி முதல் பி.ப.3:00** மணி வரை ஒரு பணிக்கான மனுக் கட்டணமாக **ரூ.15,000.00** இனை செலுத்தி மனு ஆவணத் தொகுப்பினை பெற்றுக்கொள்ளலாம்.
6. முத்திரையிடப்பட்ட மனுக்கள் தனித்தனி உறைகளில் இடப்பட்ட இரண்டு நகல் பிரதிகளுடன், அசல் மற்றும் நகல் பிரதிகளுடன் செயற்திட்டத்தின் பெயரை உறையின் மேல் இடது பக்க மூலையில் குறிப்பிட்டு, **2024.03.26 ஆம் திகதி பி.ப.02.30 மணிக்கு** முன்னர் நகராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் மனுதாரர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.
7. அனைத்து மனுக்களும் மனுப் பாதுகாப்பு அல்லது அட்டவணையின் 05வது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிய பண வைப்புத்தொகையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுக்கள் செல்லுபடியாகும் காலம் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும்.
8. மனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி சமர்ப்பிக்க வேண்டும்.

நகராட்சி ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.


S&S SINCE 1892

Raigam
THE KINGDOM OF RAIGAM®

# பாரிய ஏலவிற்பனை

**மோட்டார் வாகனங்கள், இயந்திராதி மற்றும் கழிவு உருப்படிகள்**

**2024 மார்ச் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

**மு.ப. 10 மணி தொடக்கம்**

**இல.: 277, ரைகம் மாவத்தை, கொஸ்வத்த, கிரிவதுடுவ, ஹோமாகமவிலுள்ள அதன் தொழிற்சாலை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் நடைபெறும்**

● **கெப்கள் :**
PF – 6XXX – Toyota Hilux Cab 2006
DAE – 7XXX – TATA 207 Single Cab 2016

● **கார்கள் :**
CAS-9XXX Wagon R Car 2014
CAU-1XXX Kiwd Car 2016
CAD-0XXX Toyota Aqua Car 2013
KE-8XXX Suzuki Maruti Car 2006

● **லொறிகள் :**
LO-3XXX Tata – 1109 EX2 Lorry 2018
LO-3XXX Eicher Lorry 2017
LM-8XXX Fuso – FA Lorry 2016
LM-8XXX Fuso – FA Lorry 2016
PQ – 1XXX Dimo-Batta Lorry 2011

● **ட்ரக்டர்கள் :**
RC -8XXX-Massey Ferguson 240-2012(Scrap)
RD-5XXX-Massey Ferguson 240 -2013 (Scrap)
RA-7XXX-Tafe 45 DI-2007 (Scrap)
RB-6XXX-Tafe 45 DI-2010 (Scrap)

● **மின்பிறப்பாக்கிகள் :**
DUETZ Generator 500 KVA (Imported from UK/Not used in SL)
Perkins Generator 275 KVA (Imported from UK/Not used in SL)
Altanator 500 KVA (Imported from UK/Not used in SL)
Denyo Generator 125 KVA
Perkins Generator 60 KVA
Dorman Generator 6QT 275 KVA Engine only (Running condition)
Dorman Generator 6QT 275 KVA Engine only (Scrap)
Dorman Generator 8QT 320 KVA Engine only (Scrap)

● **எஸ்காவேட்டர்ஸ்/போர்க்லிப்ட் :**
Komatsu Excavator PC 120-3
Komatsu Excavator Under Garage PC 128
CAT Forklift 3.5T
JCB Telehandler

● **மேலும் உள்ளடங்குவன :**
Scrap Iron, Stainless Steel scrap, Cast Iron, Used Batteries, Used Tyres & Tubes, Used Copper Wires, Aluminium Scraps, Burnt oil, Used sanitary Napkin Machine parts, Leyland 2518 Cabin, Trailers & Parts, Stacker Engine, Heavy Machinery Spare Parts & Scraps, Used Bearings, Used Vehicle & Motor Cycle Spare Parts, Used Motors, Used Water Pumps, PVC Pipes items, Plastic scraps, Used Electronic Items, Used Air Filters, Air Compressor Tank, Used Jacks, Oil Compressor, Unused Particle Boards (B Grade), Cocopeat, Used Electronic Scales, Damaged Solar Panels, Plastic Cans, Used Water Tanks, Used polysack Bags, Used Tin, 5L/20L/25L Plastic Cans, 200L Plastic Barrels, 210L Steel Barrels, Used Amano sheets, Used Computer Parts & UPS, Hydraulic Hoses etc.,

**மேலேயுள்ள வாகனங்கள் மற்றும் உருப்படிகளை பார்வையிடல் - ஏல இடத்தில்**
● **பின்வரும் உருப்படிகளையும் இங்கு பார்வையிடலாம் :**

| | |
|---|---|
| 210 L Steel Barrels, 25kg Plastic Cans, Plasticell Tanks 10,000 L, Scrap Steel Wires | The Natural Choic Pvt Ltd – Palpola, Galpatha (Factory) |
| Trailer Chassis, Scrap Iron, Scrap Sink Aluminium Roofing Sheets | Raigam Eastern Salt Co., Ltd., - Kumburupiddi East, Kuchchaveli, Trincomalee |

**பார்வையிடல் - 2024 மார்ச் 07 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் மார்ச் 09 ஆம் திகதி சனிக்கிழமை வரையும் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 5 மணி வரையும்)**

மேலதிக விபரங்களுக்கு : 0744 061 747/0744 061 748 , www.raigam.lk, www.waymsalterns.lk

**விற்பனை நிபந்தனைகள்:**
- நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத டிக்கெட் கட்டணம் ரூபா 1,000/= மற்றும் மீளளிக்கப்படும் வைப்பு ரூபா 10,000/=
- **கொடுப்பனவு:** சுத்தியல் வைக்கப்பட்டதும் ரொக்கப்பணமாக வாகனங்களுக்காக மீளளிக்கப்படாத ஆரம்ப வைப்பு 25% மற்றும் ஏனைய இயந்திரங்களுக்கு மற்றும் கழிவுகளுக்காக 50% செலுத்த வேண்டும். எஞ்சிய கொடுப்பனவு மற்றும் அகற்றிக் கொள்ளல் 2024 மார்ச் 13 ஆம் திகதியன்று புதன்கிழமை.
- முன்னறிவித்தலின்றி ஏலத்திலிருந்து எந்தவொரு வாகனம் (வாகனங்கள்)/உபகரணத்தை வாபஸ் பெறுவதற்கு முகாமைத்துவத்திற்கு உரிமையுள்ளது.
- ஏலதாரரின் முடிவே இறுதியானதாகும்.

## சொக்மன்ட் அன்ட் சமரவிக்ரம

**ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்.**

**தலைமை அலுவலகம்.**
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொ: 081-2227593, தொ./தொலைநகல்: 081-2224371
மின்னஞ்சல்: **schomankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
6ஏ, பெயார்பீல்ட் கார்டன்ஸ், கொழும்பு-8.
தொ: 011-2671465, 2671468,
தொ : தொலைநகல்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera 1892.com

இணையதளம்: **www.sandslanka.com**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

# தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை

(நாரா நிறுவனம்)

# பதவி வெற்றிடங்கள்

கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்) இலங்கையில் நீர் வளம் தொடர்பிலான துறையில் ஆய்வு மேம்பாடு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும் பெறுப்பை ஏற்றுள்ள பிரதான தேசிய நிறுவனம் ஒன்றாகும்.

நாரா நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் உள்ள பதவிகளுக்காக குறித்த தகைமை மற்றும் அனுபவம் கொண்ட நபர்களுக்கு வாய்ப்பு திறக்கப்பட்டுள்ளது.

| வரிசை இலக்கம் | பதவி | பிரிவு | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01 | பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆய்வு மற்றும் அபிவிருத்தி | HM 2-1 | 01 |
| 02 | முதன்மை விஞ்ஞானி - பிராந்திய ஆய்வு நிலையம் - பன்னாபிட்டிய | HM 1-3 | 01 |
| 03 | சிரேஷ்ட விஞ்ஞானி | AR – 2 | 02 |
| 04 | சிரேஷ்ட நீரியல் நில அளவையாளர் | AR – 2 | 01 |
| 05 | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | MM 1-2 | 01 |
| 06 | நிலப்படவாளர்/ தரவு பகுப்பாய்வாளர் (கடல்) | JM 1-2 | 01 |
| 07 | கணக்கு அதிகாரி | JM 1-2 | 01 |
| 08 | கப்பல் தலைவர் | JM 1-2 | 01 |
| 09 | சுக்கானி | MA 2-2 | 01 |
| 10 | ஆய்வு உதவியாளர் | MA 2 | 01 |
| 11 | உதவி வலைப்பின்னல் நிர்வாகி | MA 2 | 01 |
| 12 | பல்லூடக திட்டமிடுநர் | MA 2 | 01 |
| 13 | தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) | MA 2 | 01 |

மேல் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தேவையான தகைமை மற்றும் வேறு விபரங்கள் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையின் இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் (www.nara.ac.lk)

கல்வித் தகைமை மற்றும் பணி அனுபவத்தை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியும், தொடர்பு கொள்ள முடியுமான தொலைபேசி இலக்கங்களையும் கொண்ட பொருத்தமான வடிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பப் படிவத்தை 2024 மார்ச் 14 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

அரச சட்டரீதியான சபை, கூட்டுத்தாபனம் அல்லது திணைக்களங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்களின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை,**
**காக்கா தீவு, மட்டக்குளி, கொழும்பு - 15,**

**011 - 2521000/ 2521006**
**(www.nara.ac.lk)**

# கேள்விக்கான அழைப்பு

## கண்டி மாநகர சபை

## கண்டி மாநகர சபைக்குத் தேவையான கீழ்க்காணும் பொருட்களை பெற்றுக் கௌ்ளல் மற்றும் சேவைக்காக பொறியிடப்பட்ட கேள்வி கோரல்

**கேள்வி கோரல் இலக்கம்:**

01 CPC/KMC/WS&DD-07TENDER 01- R1 மேலதிக நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உத்தேச அலுவலக கட்டிடம் மற்றும் ஓய்வறையை நிர்மாணித்தல்

02 CPC/KMC/WS&DD-07TENDER 02- R2 நீர் பம்பி நிலையத்தின் புதிய மின் பெனல் ஒன்றை வழங்கிப் பொருத்துதல்

03 CPC/KMC/WS&DD-07TENDER 03 கெட்டம்பே சுத்திகரிப்பு நிலையத்தில் துடிப்பு (Pulese) தடாகங்களில் இயந்திர விடயங்களின் புதுப்பித்தல்

04 CPC/KMC/FD/S/PC02/2024/08 நீர் கைத்தொழில் பிரிவிற்குத் தேவையான VALVE மற்றும் துணைப்பாகங்களை பெற்றுக் கொள்ளல்

1. கண்டி மாநகர சபைக்கு தேவையான கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குவதற்காக (கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு) தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | உருப்படி | தகைமைகள் | கேள்விப் பிணை முறி செல்லுபடியாக வேண்டிய காலம் | கேள்வி ஆவணத்தின் விலை (VAT உடன்) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | மேலதிக நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உத்தேச அலுவலக கட்டிடம் மற்றும் திறந்த அறையை நிர்மாணித்தல் (கட்டம் 2) | C07 அல்லது அதற்கு மேல் | 2024.08.01 | ரூ. 2360.00 | ரூ. 85,000.00 |
| 2 | R2 நீர் பம்பி நிலையத்தின் புதிய மின் பெனலை வழங்கி பொருத்துல் | EM 04 | 2024.08.01 | ரூ. 2360.00 | ரூ. 50,000.00 |
| 3 | கெட்டம்பே சுத்திகரிப்பு மத்திய நிலையத்தில் துடிப்பு தடாகங்களில் இயந்திர விடயங்கள் புதுப்பித்தல் | EM03 | 2024.08.01 | ரூ. 2360.00 | ரூ. 100,000.00 |
| 4 | நீர் கைத்தொழில் பிரிவிற்குத் தேவையான VALVE மற்றும் துணைப்பாகங்களை பெற்றுக் கொள்ளல் | கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப் படுமாறு | 2024.08.01 | ரூ. 2360.00 | ரூ. 100,000.00 |

1. **சேவை இல. 01, 02 மற்றும் 03**

   இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு நீர் கைத்தொழில் பொறியியலாளர், மாநகர சபை, கண்டி (தொலைபேசி 081-2222805, மின்னஞ்சல் waterdepartment879@gmail.com) இடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை 04.03.2024 முதல் 28.03.2024 வரை அலுவலக நேரங்களில் 9.00 மணி முதல் 15.45 மணி வரை நீர் கைத்தொழில் பொறியியல் பணிமனையில் கட்டணம் செலுத்தாமல் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **உருப்படி இல. 04**

   இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கணக்காளர் (வழங்கள்), மாநகர சபை, கண்டி (தொலைபேசி 081 2232071) (மின்னஞ்சல் supplieskmc@gmail.com) இடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் மேற்படி உருப்படிக்காக கேள்வி ஆவணங்களை 04.03.2024 முதல் 28.03.2024 வரை அலுவலக நேரங்களில் 9.00 மணி முதல் 15.45 மணி வரை கணக்காளர் (வழங்கல்கள்) அலுவலகத்தில் கட்டணம் செலுத்தாமலேயே இவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை 04.03.2024 முதல் 28.03.2024 வரை வேலை நாட்களில் 9.00 மணி முதல் 14.45 மணி வரை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து வெட் மற்றும் முத்திரைக் கட்டணத்துடன் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா இரண்டாயிரத்து முன்னூற்றி அறுபது கட்டணத்தை (ரூ. 2360.00 ஒரு விண்ணப்பம் மட்டும்) மாநகர காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை குறித்த பிரிவிற்கு (சேவை இல. 01, 02 மற்றும் 03 நீர் கைத்தொழில் பொறியியல் பணியகத்திலும் உருப்படி இல. 04 கணக்காளர் (வழங்கல்கள்) பிரிவிலும் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகள் காசாக மாத்திரம் வழங்கப்படும்.
3. தொடர் இல. 02, 03 மற்றும் 04 இற்காக கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.03.14ம் திகதி கண்டி மாநகர சபை மண்டபத்தில் நடைபெறும்.
4. கேள்விகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு கடித உறைகளில் இட்டு ‘கேள்விச் சபையின் தலைவர், கேள்விச் சபை, மாநகர சபை, கண்டி’ முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பிரதம மாநகர கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் 02.04.2024 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்பு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
5. கேள்விகள் திறத்தல் 2024.04.02 கண்டி மாநகர சபையின் மாநகர மண்டபத்தில் மு.ப. 10.00 இற்கு கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டவுடன் இடம்பெறும்.
6. கேள்விப் பிணை மேலே விபரிக்கப்பட்டுள்ள காலம் வரை மற்றும் பெறுமதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப் பிணை கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் பெயரில் விநியோகிக்கப்படல் வேண்டும். கேள்விப் பிணைமுறி இலங்கை ரூபாவில் இருப்பதுடன் கேள்வி ஆவணத்தின் IVம் பிரிவில் தரப்பட்டுள்ள மாதிரியில் இருத்தல் வேண்டும்.
8. காரணம் கூறாமலேயே கிடைக்கப் பெறும் எந்தக் கேள்வியையும் நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு தொழில் தருநர் (கண்டி மாநகர சபைக்கு) உரிமையுண்டு.

திகதி: 29.02.2024

**கே.கே.ஜி.ஐ.டி.பி. விஜேதிலக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, கண்டி.**






# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLECIC)

# பதவி வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் இலங்கையில் அமைந்துள்ள ஏற்றுமதி கடன் முகவரான்மை மாத்திரமே இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனமாகும். இலங்கையின் ஏற்றுமதியாளர்கள், வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுக்கு கடன் முகாமைத்துவ தீர்வு ஆகியவற்றின் மூலமாக தகவல், ஆதரவு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கும் வர்த்தகத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

நாம் தொடர்ந்து வளர்வதுடன் முன்னேறிச் செல்லும் பாதையில் இருப்பதால் திடமான வெளியேறிச் செல்லும் பலமான சமூகதொடர்பு திறன்களையுடைய தனிநபர்களை எமது புகழ்வாய்ந்த அமைப்பின் பங்குதாரராக செயற்படுவதற்கு அழைக்கின்றோம்.

**01. சந்தைப்படுத்தல் தலைவர்/ பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) – HM 1-3 வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார நிருவாகம், வியாபார முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டப்படிப்புப் பட்டமொன்று.

   அத்துடன்

   பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்.

   மற்றும்

   கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய அனுபவத்துடன் ‘‘நிருவாக மட்டத்தில்” ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனத்தின் இணைந்த/முழுமையான அங்கத்துவம்.

   மற்றும்

   கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவனமொன்றில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் “நிருவாக மட்டத்தில்", ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

**வயது** : 35 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : HM 1-3 – 2016 ரூபா [86,865-15x2,270 – 120 ,915] + போக்குவரத்து அடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அனைத்து படிகளும்.

**02. உதவி பொது முகாமையாளர் பதவி (செயற்பாடுகள்) HM 1-1 பதவி வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரம், புள்ளிவிபரம் அல்லது கணிதம், வியாபார நிருவாகம், கணக்கியல், வர்த்தகம், சட்டம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்

   அத்துடன்

   பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்.

   மற்றும்

   ‘நிருவாக மட்டத்தில்’ கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபையொன்றில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.
2. பதவிக்கு உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனத்தின் இணைந்த/முழுமையான அங்கத்துவம்.

   அத்துடன்

   ‘நிருவாக மட்டத்தில்’ கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபையொன்றில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

**வயது** : 35 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : HM 1-1 – 2016 ரூபா [80,295-15x2,270 – 114,345] + போக்குவரத்து அடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அனைத்து படிகளும்.

**03. உதவி பொது முகாமையாளர் (உதவி கோரிக்கைகள் மற்றும் அளவீடுகள்) HM 1-1 பதவி வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், கணக்கியல், நிதி, வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டப்படிப்பு பட்டம்.

அத்துடன்

பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்.

மற்றும்

கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய அனுபவத்துடன் ‘‘நிருவாக மட்டத்தில்” ஆகக் குறைந்தது 13 வருட அனுபவத்தில் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது** : 35 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : HM 1-1 – 2016 ரூபா [80,295-15x2,270 – 114,345] + போக்குவரத்து அடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அனைத்து படிகளும்.

**04. உதவி முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல்) MM 1-3 பதவி வெற்றிடங்கள் - 02**

**கல்விசார் தகைமைகள் (கீழேயுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார நிருவாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்.

   மற்றும்

   முதலாம் பட்டப்படிப்பை பெற்ற பின்னர், பதவிக்கான உரித்தான துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் இடைநிலை பரீட்சையில் பெற்ற சித்தியுடன் பாடப்பரப்பானது பதவிக்கு உரித்தானதாகவும் பதவிக்குரித்தான துறையில் ஒரு வருட தகைமை பின்பட்ட ஒரு வருட அனுபவம்.

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : MM 1-3 – 2016 ரூபா [55,925-10x1,375-15 x1,910-98,325] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**05. உதவி முகாமையாளர் பதவி (கோரிக்கை மற்றும் அறவீடுகள்) MM 1-3 பதவி வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், கணக்கியல், நிதி, வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்

மற்றும்

முதலாம் பட்டப்படிப்பை பெற்ற பின்னர், பதவிக்கான உரித்தான துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பட்டப்படிப்பின் தகைமைப்பட்ட அனுபவம்

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : MM 1-3 – 2016 ரூபா [55,925-10x1,375-15 x1,910-98,325] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**06. உதவி முகாமையாளர் பதவி (செயற்பாடுகள்) MM 1-3 பதவி வெற்றிடங்கள் - 02**

**கல்விசார் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரம், புள்ளிவிபரம் அல்லது கணிதம், வியாபார நிருவாகம், வர்த்தகம், கணக்கியல், சட்டம் அல்லது வேறேதாவது துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்

மற்றும்

முதலாம் பட்டப்படிப்பை பெற்ற பின்னர், பதவிக்கான உரித்தான துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : MM 1-3 – 2016 ரூபா [55,925-10x1,375-15 x1,910-98,325] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**07. கனிஷ்ட முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல்) JM 1-2 பதவி வெற்றிடங்கள் - 02**

**கல்விசார் தகைமைகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார நிருவாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்.
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் இடைநிலை பரீட்சையில் பெற்ற சித்தியுடன் பாடப்பரப்பானது பதவிக்கு உரித்தானதாகவுமிருத்தல்.

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : JM 1-2 – 2016 ரூபா [43,355-10x755-18 x1,135-71,335] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**08. கனிஷ்ட முகாமையாளர் பதவி (செயற்பாடுகள்) JM 1-2 பதவி வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரம், புள்ளிவிபரம் அல்லது கணிதம், வியாபார நிருவாகம், வர்த்தகம், கணக்கியல், சட்டம் அல்லது வேறேதாவது துறையில் பெற்றவொரு பட்டப்படிப்பு பட்டம்

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : JM 1-2 – 2016 ரூபா [43,355-10x755-18 x1,135-71,335] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**09. கனிஷ்ட முகாமையாளர் (கோரிக்கைகள் மற்றும் அறவீடுகள்) JM 1-2 பதவி வெற்றிடம் - 01**

**கல்விசார் தகைமைகள் :**

ப.மா.ஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், வர்த்தகம், கணக்கியல், நிதி அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டப்படிப்பு பட்டமொன்று.

**வயது** : 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : JM 1-2 – 2016 ரூபா [43,355-10x755-18 x1,135-71,335] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**10. சாரதிப் பதவி – PL3 பதவி வெற்றிடங்கள் - 02**

**கல்விசார் தகைமைகள் :**

ஆகக்கூடியது இரு அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

மற்றும்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட பார வாகனங்களுக்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் அத்துடன் சாரதி உரிமத்தைப் பெற்ற பின்னர், வாகனங்களை செலுத்துவதில் பெற்ற ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவம்.

**வயது** : 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பள மட்டம்** : PL3 - 2016 ரூபா [26,290-10x270-10 x300-10X330-12x350 – 39,490] + அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசாங்க படிகளும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை பிரஜையொருவராகவிருத்தல் வேண்டும்

பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல், உளரீதியில் சிறந்த ஆரோக்கியத்தையும் தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கான தகுதியையும் கொண்டிருத்தல்.

மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல்

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகலூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேலேயுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உரித்தான சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகளுடன் பதிவுத் தபாலில் 2024 மார்ச் 18 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் தன்மையில் ‘தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், 4 ஆம் மட்டம், NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02’ என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்,**
**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**4 ஆம் மட்டம், NDB-EDB கோபுரம்,**
**இல.: 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**தொலைபேசி: 011 2307519**
**தொலைநகல்: 011 2307515**
**இணையம்: www.slecic.lk**

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

# பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளுக்கு தயாரிக்கப்பட்ட மாட்டுத் தீவணங்களை வழங்குவதற்காக 1986ஆம் வருட 15ஆம் இலக்க விலங்குணவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விலங்குணவு உற்பத்தியாளர்களிடமிருந்து பின்வரும் காலஎல்லைக்கு இயைபாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தயாரிக்கப்பட்ட மாட்டுத்தீவணம் - 2024 மே மாதம் 01ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வரை

| பண்ணை | தேவையான அளவு | | |
|---|---|---|---|
| | High yielding Feed (Milking cow ) - (M.T) | General Feed (Milking Cow) - (M.T) | Calf Starter Feed (M.T) |
| ரிதியகம பண்ணைக்கு | 1,360 | 570 | 66 |
| போபத்தலாவ, டயகம, ரொசிட்டா, மெனிக்பாலம பண்ணைகளுக்கு | 789 | 580 | 30 |
| உலர் வலயம் மற்றும் தென்னை முக்கோண பண்ணைகளுக்கு | - | 1,403 | 95 |

தேவையான விலங்குணவு அளவு, விபரக்குறிப்புகள் (Specifications) மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய விலைமனுப் படிவங்களை கடமை (வேலை செய்யும்) நேரங்களில் பின்வரும் முகவரியிலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் முகாமையாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுப் படிவத்திற்கு 5,000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும்.

2024 மார்ச் மாதம் 22ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் என்பதுடன் 2024 மார்ச் மாதம் 25 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அந்நேரத்திற்கு பின் கொழும்பு 05, நாவல வீதி, நாரஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாரஹென்பிட்டி, கொழும்பு 05.**

**தொ.பே. இல. 0112- 501701, 011- 7173989, 011-5746300, 011-5746301**
**மின்னஞ்சல்: supplies.nldb@gmail.corn**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு - தேசிய வைத்தியசாலை கண்டி

**Primary Antibodies & Reagent for Immunohistochemistry Analyzer (Open System)**

கண்டி தேசிய வைத்தியசாலையின் Histopathology ஆய்வு கூடத்தில் Immunohistochemistry Analyzer இற்காக கீழ்க்காணும் இரசாயன "அன்டி பயோடிக்களை கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணுமாறு பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு கண்டி தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் பணிமனையில் திறக்கப்படும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி :
**2024.03.04 முதல் 2024.03.26 வரை மு.ப. 10.30 இற்கு**

கேள்விகள் திறக்கப்படும் தினம் :
**2024.03.26 மு.ப. 10.30 இற்கு**

| | உருப்படி | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 01 | Primary Antibodies & Reagent Immunohistochemistry Analyzer (Open System) in Histopathology Laboratory, National Hospital Kandy (FB/Histology/2024) | Rs. 3,000.00 |

கண்டி தேசிய வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவருக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்து மற்றும் மேற்படிகண்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.03.04 முதல் 2024.03.25 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 2.00 வரை கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் கேள்வி ஆவணங்களினைப் பெற்றுக்கொள்ளலாம். இக்கால எல்லையில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

திறந்த போட்டி முறையில் (NCB) கேள்விகள் கோரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரை அழையுங்கள் (081-2233337 முதல் 42 வரை - நீடிப்பு 2208)

**பணிப்பாளர் (தலைவர் - பெறுகைக்குழு)**
**தேசிய வைத்தியசாலை - கண்டி**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම සහ වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture and Plantation Industries

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP
Funded by The European Union

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
**கமத்தொழில் அமைச்சு**
விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்
**சர்வதேச அபிவிருத்திச் சங்க கடன் இல.: 5873 LK**

## மொனராகலை மாவட்டம், கிரிஇப்பன்வெவ, புஞ்சிவெவ, வெலிஆர மற்றும் சமகிபுர கிராம சேவையாளர் பிரிவுகளில் தற்போதுள்ள மூன்று லிப்ட் நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு வேலைகள்

ஒப்பந்த இலக்கம்: LK-MOA-PMU-353345-CW-RFB

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | செல்லு படியாகும் காலப் பகுதி | மீளளிக்கப் படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-353345-CW-RFB | மொனராகலை மாவட்டம், கிரிஇப்பன்வெவ, புஞ்சிவெவ, வெலிஆர மற்றும் சமகிபுர கிராம சேவையாளர் பிரிவுகளில் தற்போதுள்ள மூன்று லிப்ட் நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு வேலைகள் | 54.8 | 4 மாதங்கள் | C4 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | 548,000.00 | 2024 ஆகஸ்ட் 22ஆம் திகதி வரை | 12,500.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக செல்லுபடியாகும் திகதியின் பிரகாரம் விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவார். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண செயற்றிட்டப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 055-2277830, 071-1650840) (மின்னஞ்சல்: uppe2asmp@hotmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று செவனகலயில் 2024 மார்ச் 11ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 2024 ஜுலை 22ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட அட்டவணையிலுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024 மார்ச் 04ஆம் திகதி முதல் 2024 மார்ச் 25ஆம் திகதி வரை இல. 566, வெல்லவாய வீதி, ஹுலந்தாவ, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண செயற்றிட்ட கண்காணிப்புப் பிரிவிற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2024 மார்ச் 25ஆம் திகதி முடிவுறுத்தப்படும்.
12. விலைமனுக்களை மேற்கூறப்பட்ட விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட கண்காணிப்புப் பிரிவு, ஊவா, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 566, வெல்லவாய வீதி, ஹுலந்தாவ, மொனராகலை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**2024 மார்ச் 04ஆம் திகதி.**

Sri Lanka
YOU'LL COME BACK FOR MORE

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

# விலைமனுக்கோரல்

## விளம்பருத்தல் மேம்பாட்டு வளர்ச்சிக்காக உற்பத்தி முகவர் நிறுவனமொன்றினை தெரிவுசெய்தல்

**Bid No: SLTPB/PROC/S/151**

SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் 360º கோண செயலாற்றுகையுடைய வணிகத்தை செயல்படுத்துவதற்காக தயாரிப்பு முகவர் நிறுவனமொன்றினை தேர்வு செய்வதற்காக தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

1. குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கான அதிகபட்ச மொத்த ஒப்பந்தப் பெறுமதி ஒரு வருடத்திற்குள் 100 மில்லியன் ரூபாவாகும் மற்றும் தேவையான நிதி இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தால் ஒதுக்கப்படும்.
2. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும் (தகுதி அளவுகோல்)

**2.1. சட்டபூர்வமான பதிவு**

2.1.1. உற்பத்தி நிறுவனம் இலங்கையில் முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

**2.2. தொழிற்சாலை அனுபவம்**

2.2.1. தயாரிப்பு நிறுவனம் கடந்த 2018 முதல் 2023 வரையிலான ஐந்து ஆண்டுகளில் உலகளாவிய வர்த்தகநாமங்கள்/சர்வதேச வர்த்தகநாமங்களுக்காக 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான வீடியோ தயாரிப்புகளை தயாரித்திருக்க வேண்டும்.

2.2.2. தயாரிப்பு நிறுவனம் 2018 முதல் 2023 வரையிலான 5 ஆண்டுகளுக்குள் பயணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொடர்பான மூன்று சர்வதேச காணொலி தயாரிப்புகளை தயாரிப்பதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**2.3. நிதி நிலைத்தன்மை**

2.3.1. குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நேர்மறை இருப்பைக் காட்டும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை முகவர் நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும். இது நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மை மற்றும் இந்த ஏலத்தினை திறம்பட நிர்வகிக்கும் திறனைக் காட்டுகிறது.

**2.4. விலை பட்டியல் வழங்குதல்**

மனுதாரர்கள் பிரிவு III இன் கீழ் விலைத் திட்டங்களில் கோரப்பட்ட அனைத்து சேவைகளையும் முழுமையாகச் செய்ய வேண்டும்.

3. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006 ன் கீழ் தேசிய போட்டி ஏல முறையை (NCB) பின்பற்றி ஏலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **nithinip@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்பி மற்றும் அதன் பிரதியை **procurement@srilanka.travell** என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒப்பந்தத்திற்கான எழுத்துபூர்வமான விண்ணப்பம் மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத் தொகையான **ரூ.20,000/- (இருபத்து ஆயிரம் ரூபாய்)** னை **2024.03.22** ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பேரில், **இலங்கை வங்கி, கூட்டுத்தாபனக் கிளையிலுள்ள 007119985** என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்ட இரசீதினை **nithinip@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலமாக அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
    - மனுதாரரின் பெயர்
    - தொடர்புகொள்ள வேண்டிய நபரின் பெயர் மற்றும் மனுதாரரின் விபரங்கள்.
    - தொடர்பு கொள்ள கூடியதான மின்னஞ்சல் முகவரி

    ஆக்கப்பூர்வமான மூலோபாய மனுதாரர்களுக்கு நிறுவனம் வழங்குவதால், கட்சிகளுக்கு இடையே பரிமாறப்படும் சில ரகசியத் தகவல்களை வெளியிடாதது குறித்து கையெழுத்திட வேண்டிய அவசியம் உள்ளது.

    எனவே, மனுதாரர்கள் SLTPB இலிருந்து ஏல ஆவணங்களைப் பெறுவதற்கு முன், SLTPB உடன் Non - Disclosure Agreement ஒப்பந்தத்தில் கையெழுத்திட பொருத்தமான நபரை பரிந்துரைப்பதன் மூலம் அங்கீகார கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
6. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **https://www.srilanka.travel/tender-documents by the interested bidders.** என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலமாக மனு ஆவணத்தை பார்வையிடலாம்.
7. இதுதொடர்பான ஒரு முன் மனுக் கூட்டம் **2024.03.07 ஆம் திகதி** இலங்கை சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ நிறுவனம் (ஹோட்டல் பள்ளி) இல் 80, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் நடைபெறும்.
8. அனைத்து விலைமனுக்களும் நிபந்தனைகளற்று மனுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத்தொகையுடன் காணப்படுவதோடு பத்திரத்தில் உள்ளவாறு முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 க்காக இலங்கை ரூபா நான்கு இலட்சம் பெறுமதியான **(ரூ.1,000,000.00)** தொகை இலங்கையில் பதிவினையுடைய **A** தர கொமர்ஷல் வங்கியிலிருந்து வெளியிடப்பட்டதாக காணப்பட வேண்டும். அவை விலைமனுக்கோரல் முடிவுத்திகதியிலிருந்து **119 நாட்கள் வரை** செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. கேள்வி மனுக்களை தலைவர், திணைக்களத்தின் பெறுகைக்குழு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 சமர்ப்பித்தல் வேண்டும், மனுக்கள் கொள்முதல் பிரிவு (கீழ்மாடி), இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு **2024.03.25 ஆம் திகதி பி.ப.02.00** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் அதே முகவரியில் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. காலதாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்
11. மேலதிக விபரங்களுக்கு கொள்முதல் தலைவரிடம் **nithinip@srilanka.travel , 0112426800 (Ext 117)** ஊடாக அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.
12. விலைமனுக்கோரல் அல்லது மனுக்கோரலை நிறுத்துதல் போன்ற அனைத்து அதிகாரமும் வழங்கல் சபைக்கு உண்டு.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்முதல் குழு,**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
**இல-80, காலி வீதி, கொழும்பு 03.**

SELACINE

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுமானப் பணிக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா தலைமை பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   i. **RDA/GAM/CE/TEN/2024/18** - பேலியகொட மீன் சந்தைக்கு முன்பாக வீதி கட்டுமானம் - (நெருக்கமான கற்களை interlocking blocks) பதித்தல் மற்றும் வழங்கல்)
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுமானப் பணிக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா தலைமை பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   i. RDA/GAM/CE/TEN/2024/18 - பேலியகொட மீன் சந்தைக்கு முன்பாக வீதி கட்டுமானம் - (நெருக்கமான கற்களை interlocking blocks) பதித்தல் மற்றும் வழங்கல்)
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - www.rda.gov.lk

தலைவர்,
பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, - கம்பஹா.
தொ.பே 033-2221020 / 033-2226752

SELACINE

# கேள்வி அறிவித்தல்

### பிரதம செயலாளர் செயலகம் - வட மாகாணம்

## பாவனையிலிருந்த வாகனங்களின் விற்பனை

1) பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம் அவர்களால் வட மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் பாவனையிலிருந்த பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | வாகன இல. | வகை / உற்பத்தி | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|
| DV/2024/01 | NP RB 3416 | Farmtrac FT60 - உழவு இயந்திரம் | 20,000.00 |
| DV/2024/02 | NP RB 4675 | Tafe - 4SD1- உழவு இயந்திரம் | 20.000.00 |
| DV/2024/03 | 37 SRI 4901 | FORD - உழவு இயந்திரம் | 20,000.00 |
| DV/2024/04 | 200 - 0303 | BAJAJ முச்சக்கர வண்டி | 6,000.00 |
| DV/2024/05 | 149-1403 | HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/06 | NP TJ 6653 | TVS - SCOOTY PEP - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/07 | NP XZ 3110 | MINNELLI - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/08 | NP HE 8645 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/09 | NP XZ 3104 | MINNELLI - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/10 | NP HE 8648 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/11 | 135-6193 | HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/12 | NP JR 4921 | Hero Honda - CD100SS - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/13 | NP JE 6934 | TVS Fiero F7- மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/14 | NP HR 3144 | DELUXE - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/15 | NP HH 1031 | HERO HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/16 | NP VH 5351 | BAJAJ - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/17 | NP MI 7483 | Hero HONDA - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/18 | NP HR 3179 | DELUXE - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| DV/2024/19 | NP WN 4528 | TVS STAR - மோட்டார் சைக்கிள் | 4,000.00 |
| பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் | | | |
| DV/2024/20 | ISUZU Motor Lorry | | 10,000.00 |
| DV/2024/21 | TAFE 45DI - உழவு இயந்திரம் | | 10,000.00 |
| DV/2024/22 | EMEI - கை உழவு இயந்திரம் | | 6,000.00 |
| DV/2024/23 | SRI TRAK - Land Vehicle Bowser | | 4,000.00 |
| DV/2024/24 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/25 | WIMAL - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/26 | TECHNIP - உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |
| DV/2024/27 | உழவு இயந்திரப் பெட்டி | | 4,000.00 |

2) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்துமூலமான கோரிக்கையுடன் ரூபா 500/- இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 04.03.2024ம் திகதி தொடக்கம் 25.03.2024 ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரையான காலப்பகுதியில் பிரதிப்பிரதம செயலாளர்- நிதி, பிரதிப்பிரதம செயலாளர் நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
3) கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 04.03.2024 ம் திகதி தொடக்கம் 25.03.2024 திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் அமைந்துள்ள வட மாகாண சபையின் தற்காலிக வாகனத் தரிப்பிடத்திலும், DV/2024/20 ISUZU - Motor Lorry பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனத்தினை சுகாதாரத் திணைக்களம் வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம் பண்ணையில் பார்வையிடலாம்.
4) ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக்கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5) கேள்விதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்விப் பிணைப் பணத்தினை (Bid Security) வைப்பாக பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அலுவலகம், வட மாகாணம், மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பணமாக செலுத்துதல் வேண்டும்.
6) கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்விப் பத்திர மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் - வாகன இல ........' எனக் குறிப்பிட்டு 26.03.2024 ம் திகதி மு.ப 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு, பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம், மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதம செயலாளர் செயலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
7) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**எஸ்.எம். சமன் பந்துலசேன,**
**தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு,**
**பிரதம செயலாளர் செயலகம்,**
**மாகாண சபை வளாகம்,**
**A 9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
01.03.2024

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

BGJ-6031 Hero I smart 2018 motor cycle அதியுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ லைபேசி 0711 210810.
015051

### 622 வீடு சொத்து

## மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தளை மாநகரின் மையப்பகுதியில் (People's Bank புதிய கட்டிடத்தின் பகுதி) 14 Perch சதுர வடிவிலான, SBMI COMMERCIAL AREA வில் அமைந்துள்ள காணி விற்பனைக்குண்டு. வியாபார, அலுவலக நோக்கங்களுக்கு உகந்தது. ஒரு Perch 3 Million பேசி தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு 0778143116
015177

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39(1)ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

2022, ஜுலை மாதம் 05ஆம் திகதிய 2287/12ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2022.06.30ஆந் திகதிய 2022ஆம் ஆண்டின் 113ஆம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 38ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளன. எனினும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. எனவே அச்சட்டத்தின் 39(1) பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் குறித்த 2022.07.05ஆந் திகதிய 2287/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த 2022.06.30ஆந் திகதிய 2022ஆம் ஆண்டின் 113ஆம் இலக்க கட்டளையை இக்கட்டளை மூலம் இரத்துச் செய்கின்றேன்.

**அட்டவணை**

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், திஸ்ஸமகாராம பிரதேச செயலாளர் பிரிவில் மாகம்பற்று சிறு பிரிவில் ரத்னெலும் வலயாய (க.சி. 830075) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.02.05ஆந் திகதிய HA/TSS/2020/534ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டு.

01. துண்டு இல. 1 - தியஸ்யாய - விஸ்தீரணம்: 1.0777 ஹெக்டயார்.

**வடக்கு:** க.சி 830075 தொகுதி 02இல் துண்டு இல. 19 மற்றும் 27, **கிழக்கு**: க.சி. 830075 தொகுதி 02இல் துண்டு இல. 27, 3 மற்றும் 32, **தெற்கு:** க.சி. 830075 தொகுதி 02இல் துண்டு இல. 27, 3, 32 மற்றும் 29, **மேற்கு:** க.சி. 830075 தொகுதி 02 இல. துண்டு இல. 32, 29 மற்றும் 19.

EOG 07-0123

**ஹரின் பெர்னாண்டோ**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

**எனது இல.: 4-3/14/2020/CEB/148**
**காணி எடுத்தல் உத்தியோகத்தரின்**
**இல.: DST/LND/07/FI/ACQUI/2020-i**

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**'மிஹிகத மெதுர', இல. 1200/6,**
**ரஜமல்வத்தை வீதி,**
**பத்தரமுல்லை.**
2023 ஜுலை 21

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2024.01.29 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு சாகா லாவண்யா யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2017.06.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1440 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2022.01.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1340 ஆகியவற்றின் பேரில் களுத்துறை, பலதொட்ட பாசல அசல, தேக்கவத்த, இல. 131D எனும் முகவரியில் அமைந்த Editing Table (ஏக உரிமையாளர்: களுத்துறை, பலதொட்ட பாசல அசல, தேக்கவத்த, இல. 131D எனும் முகவரியைச் சேர்ந்த திரு. கோணடுவகே நுவன் சஞ்ஜீவ பெரேரா) என்பவரிடமிருந்து BOC வீடமைப்புக் கடன் மீது 2024.01.04 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 20,723,365.08 (இருபது மில்லியன் எழுநூற்று இருபத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து ரூபாய் எட்டு சதமும்) அத்துடன் ரூ. 17,490,000.00 (பதினேழு மில்லியன் நானூற்றுத் தொண்ணூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பத்து (10%) வீதத்தில் 2024.01.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், தவணைக்கடன் மீது 2024.01.04 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 4,429,850.54 (நான்கு மில்லியன் நானூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்றைம்பது ரூபாய் ஐம்பத்து நான்கு சதமும்) அத்துடன் ரூ. 3,907,556.52 (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து ஏழாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தாறு ரூபாய் ஐம்பத்திரெண்டு சதம்) மீது ஆண்டுக்கு ஏழு தசம் இரண்டு ஐந்து (7.25%) வீதத்தில் 2024.01.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், அவசர நிலைமை கொவிட் 19 கடன் மீது 2024.01.04 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 368,912.66 (முந்நூற்று அறுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்துப் பன்னிரெண்டு ரூபாய் அறுபத்தாறு சதமும்) அத்துடன் ரூ. 356,000.00 (முந்நூற்று ஐம்பத்தாறாயிரம் ரூபாமீது ஆண்டுக்கு நான்கு தசம் ஏழு எட்டு (4.78%) வீதத்தில் 2024.01.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2017.06.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1440 மற்றும் 2022.01.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1340 ஆகியவற்றின் பேரில் BOC வீடமைப்புக் கடன் மீது ரூ. 20,723,365.08 (இருபது மில்லியன் எழுநூற்று இருபத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து ரூபாய் எட்டு சதமும்) தவணைக்கடன் மீது 4,429,850.54 (நான்கு மில்லியன் நானூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்றைம்பது ரூபாய் ஐம்பத்து நான்கு சதமும்) அவசர நிலைமை கொவிட் 19 கடன் மீது ரூ. 368,912.66 (முந்நூற்று அறுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்துப் பன்னிரெண்டு ரூபாய் அறுபத்தாறு சதமும்) அத்துடன் 2024.01.05 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நுகேகொட மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகப் பிரிவில் எதுல்கோட்டை 521ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைகளுள் எத்துல் கோட்டையில் அமைந்த ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை வரிமதிப்பு இல. 616/3 Aஐக் கொண்ட "இம்புல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர்.ஏ. சில்வா தயாரித்த 2009 ஜனவரி 04 திகதியிட்ட வரைபடம் இல. 3555 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு B2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு B2, வடக்கில் ஜே.பி. வெத்தேவ மற்றும் ஏனையோரின் காணியும் கிழக்கில் வரைபடம் இல. 197 இல் காணித்துண்டு 2 உம், தெற்கில் இக்காணியின் காணித்துண்டுகள் B3 மற்றும் B1ம், மேற்கில் இக்காணியின் காணித்துண்டு B1ம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3555 இன் பிரகாரம் எட்டு தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.8.05) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நுகேகொட தெல்கந்த காணிப் பதிவகத்தில் A 383/88இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

மேற்குறிப்பிட்டவாறு எத்துல் கோட்டையில் அமைந்த "இம்புல்கஹவத்த" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 3555 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு B3 (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு B3, வடக்கில் இக்காணியின் காணித்துண்டு B2உம் கிழக்கில் வரைபடம் இல. 197 இல் காணித்துண்டு 2 உம், தெற்கில் வரைபடம் இல. 197 இல் காணித்துண்டு 6உம், மேற்கில் இக்காணியின் காணித்துண்டு B1ம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3555 இன் பிரகாரம் ஒன்று தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.1.60) விஸ்தீரணமுடையது. இக்காணி நுகேகொட தெல்கந்த காணிப்பதிவகத்தில் A 383/89இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ.சீ. விக்ரமசிங்ஹ தயாரித்த 1964 டிசெம்பர் 29 திகதியிட்ட வரைபடம் இல. 197 இல் எல்லை நிர்ணயித்த (பாதைக்கான ஒதுக்கம்) காணித்துண்டு 6ஐ பாவிப்பதற்கான உரிமையும் ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி எச்.றீ.எஸ். மொஹொட்டி.**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி,**
**மேற்தரக்கிளை**
**நுகேகொட**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வயம்ப அபிவிருத்தி அதிகாரசபை
## வடமேல் மாகாண சபை
# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி சமையலறையை (HOT RAGE & PASTRY KITCHEN) வழங்குதல், நிறுவுதல், நிர்மாணித்தல் மற்றும் ஒப்படைத்தல்

குருநாகல், போயகனே, புதிய மல்கடுவாவ, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி சமையலறையை வழங்குதல், நிறுவுதல், நிர்மாணித்தல் மற்றும் ஒப்படைத்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வடமேல் மாகாண சபை - வயம்ப அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை போயகனே, புதிய மல்கடுவாவ, மாகுருஓயவத்த, வயம்ப அபிவிருத்தி அதிகாரசபை, பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 037-2225210) மற்றும் மேற்கூறிய தலைமை அலுவலகத்தில் 2024-03-04ஆம் திகதி முதல் 2024-03-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத ஆயிரம் ரூபா (ரூபா 1000.00) கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-03-04ஆம் திகதி முதல் 2024-03-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் போயகனே, புதிய மல்கடுவாவ, மாகுருஓயவத்த, வயம்ப அபிவிருத்தி அதிகாரசபை, பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும் அல்லது https://www.wayambatourism.lk எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

போயகனே, புதிய மல்கடுவாவ, வயம்ப அபிவிருத்தி அதிகாரசபையில் 2024 மார்ச் 11ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

நகல்பிரதிகளுடன் முறையாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பைக் குறிப்பிட்டு 2024 மார்ச் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வயையில் தலைவர், பெறுகைக் குழு, புதிய மல்கடுவாவ, போயகனே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரரால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வயம்ப அபிவிருத்தி அதிகாரசபை,**
**புதிய மல்கடுவாவ, போயகனே.**

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# பெறுகை அறிவித்தல்

### உணவகத்தை நடத்திச் செல்வதற்கு சேவை வழங்குநர் பெறுகைக்காக கேள்வி கோரல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு (UGC) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுயசேவை உணவகம் (கெபடேரியா) இற்காக சேவை வழங்குநரின் பெறுகைக்காக ஒரு (01) வருட காலத்திற்கு பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து 2024.03.18 பி.ப. 3.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. சேவை வழங்குநரால் காலையுணவு மற்றும் பகல உணவு வழங்குதல் வேண்டும். பகல் உணவு புபே (சுயசேவை) முறையில் மற்றும்/அல்லது கவுன்டர் (கருமபீடம்) முறையிலும் பரிமாறப்படல் வேண்டும்.

கேள்விகள்: அக்கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் 2024.03.18 பி.ப. 3.00 இற்கு கொழும்பு 07 வோர்ட் பிளேஸ், இல. 20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலகத்தில் புதிய அலுவலக கூட்ட அறையில் (New Bord Room) இல் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அனுமதி அளிக்கப்படும்.

கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூபா ஐந்நூறு (ரூ. 500/-) கட்டணத்தை காசாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் காசாளரிடம் செலுத்தி பின்பு விநியோகிக்கப்படும் காசுப் பற்றுச் சீட்டை சமர்ப்பித்து 2024.03.04 முதல் 2024.03.17 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவி செயலாளர்/ பொது நிர்வாகம் இடம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பிணையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் காசாளருக்கு மீளளிக்கப்படும் ரூபா மூவாயிரம் (ரூ. 3000/-) கட்டணத்தை காசாக செலுத்துதல் வேண்டும். கேள்விப் பிணையை செலுத்திய பின்பு பெற்றுக் கொண்ட உத்தியோக பூர்வ நிதிப் பற்றுச்சீட்டு சகல கேள்வியுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொறியிடப்பட்ட கேள்விக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுயசேவை உணவகத்திற்கான சேவை வழங்குநரைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை, என்று குறிப்பிட்டு 2024.03.18 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கொழும்பு 07 வோர்ட் பிளேஸ், இல. 20 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு -07 வோர்ட் பிளேஸ், இல. 20 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவி செயலாளர்/ பொது நிர்வாக அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் தயாரிக்கும் போது அல்லது சமர்ப்பிக்கும் போது கேள்வி தாரர்களுக்கு ஏற்படும் ஏந்த விதமான செலவு அல்லது ஆகு செலவுகள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

மேலதிக தகவல்களுக்கு தொ.பே. 011-2685183 மூலம் சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ பொது நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்/ நிறுவன பெறுகைக் குழு.**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.**
**இல. 20, வோர்ட் பிளேஸ்,**
**கொழும்பு -07.**

2024.03.04

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
+94 112429342
+94 112429343